# சுற்றுச்சூழல் – வனத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண். 54

## வனம்

## 2014–2015

**எம்.எஸ்.எம். ஆனந்தன்**
**அமைச்சர் – வனம்**

©
தமிழ்நாடு அரசு
2014

# மானியக் கோரிக்கை எண். 54

# கொள்கை விளக்கக்குறிப்பு – 2014–2015

# வனத்துறை

**முன்னுரை**

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்" – திருக்குறள் (742)

மனித சமுதாயத்திற்கு தேவையான உயிர்ச்சூழல் பாதுகாப்பினை அளிப்பதில் அடர்ந்த காடுகள், சுத்தமான நீர், வளமான மண் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை பழந்தமிழ்ப்புலவர்கள் வலியுறுத்தியுள்ளனர். வற்றாத மீண்டும் புதுப்பித்துக் கொள்ளக்கூடிய வளங்களை வழங்குவது மற்றும் ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் மற்றும் அதன் சமநிலையினைப் பாதுகாப்பது ஆகிய இரு பணிகளையும் செயல்படுத்தும் தொகுப்பாக, வனங்கள் விளங்குகிறது. வனங்கள், மண் மற்றும் அதனிலுள்ள அதிக அளவுள்ள இலை தழை மக்கிய சத்துள்ள மண்ணைப் பாதுகாத்து நுண்துளைகளையுடைய நீர்த்தேக்கங்கள் போன்று செயல்பட்டு, நீரினைத் தேக்கி

மற்றும் அதனை படிப்படியாக விடுவிக்கும் பணியினை தொடர்ந்து மேற்கொள்கிறது. பூமியின் கலயத்திலிருந்து நீரினைப் பெற்ற மரங்கள் அதனை இலைத்துவாரங்கள் வழியாக நீராவிப்போக்கு முறையில் வளிமண்டலத்தில் விடுவித்து மீண்டும் அதனை மழையாக திரும்பப்பெறுகிறது. மரங்கள் ஒளிச்சேர்க்கையின் போது கரியமில வாயுவினை உட்கிரகித்தும், பிராணவாயுவினை வளிமண்டலத்தில் வெளியிட்டும் காற்றினை சுத்தம் செய்கிறது. எந்தவொரு நாட்டின் நிலைத்தன்மையும், வளமும், தற்கால சந்ததியினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டுமின்றி, வருங்கால சந்ததியினரின் நலனையும் பாதிக்காத சீரான சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருக்கும். நிலம், நீர் மற்றும் உயிரினச்சூழல் பாதுகாப்பிற்கு, மக்கள் தொகைப் பெருக்கமும், பெருகிவரும் தொழில்மயமாக்கலும் பெரும்சவாலை ஏற்படுத்தி வருகிறது. துரிதமான மக்கள்தொகைப் பெருக்கத்தின் காரணமாக வனவளங்கள் அதிக அளவிற்குப் பயன்படுத்தப்படுவதால், காடுகள் தரங்குன்றவும், வேளாண்நிலங்கள் வளமிழக்கவும் வழிவகுக்கின்றன.

கழிவுநீர் பெருக்கெடுத்து ஓடுதல், குடிசைகளின் பெருக்கம், நன்செய்நிலம் மறைந்து வருதல், காற்று மற்றும் நீர் மாசுபடுதல் ஆகியவற்றிற்கு அதிவேக நகர்ப்புற வளர்ச்சி வழிவகுக்கிறது. எனவே, சூழல் சார்ந்த வளர்ச்சியே தற்போதைய தேவையாகும்.

வனம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு இருந்து வரும் நடைமுறையாகும். இது இயற்கையினை நாம் மதிக்கக் கற்றுக்கொடுத்தது மட்டுமின்றி உயிரினங்கள் மற்றும் உயிரற்றவைகள் இடையே உள்ள இணைந்த தொடர்பினை அறிந்து கொள்ளவும் வழிவகை செய்துள்ளது. இந்திய அரசியலமைப்புச்சட்டத்தில், மாநிலக் கொள்கையின் வழிகாட்டு நெறிமுறைகளின் கீழ் சுற்றுச்சூழல் பாரம்பரியத்தின் பாதுகாப்பு குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், நாட்டின் வனம் மற்றும் வனஉயிரினங்களைப் பாதுகாக்கவும் மாநிலம் முயற்சிக்க வேண்டும் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 48-A வற்புறுத்துகிறது. அனைத்து உயிர்களிடத்தும் கருணை காட்டுவதும், வனங்கள், ஏரிகள், ஆறுகள்,

வன உயிரினங்கள் உள்ளிட்ட இயற்கைச்சூழலை பாதுகாப்பதும், மேம்படுத்துவதும் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு **51** A (g) எடுத்துரைக்கிறது.

## 2. வனங்கள் மற்றும் பருவநிலை மாற்றம்

பருவநிலை, உலகஅளவில் தாவர வகைகளை முடிவு செய்யும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காரணியாக உள்ளது. அது வனங்களின் பரவல், கட்டமைப்பு மற்றும் சூழலியலை நிர்ணயிக்கும் கணிசமான ஆற்றல் கொண்டதாக விளங்குகிறது. விரைவான நகர மயமாதல், தொழிற்மயமாக்கம் மற்றும் பெருகிவரும் போக்குவரத்துத் தேவைகள் போன்றவற்றிற்காக மனிதன் பயன்படுத்தி வரும் நிலக்கரி, டீசல் மற்றும் பெட்ரோல் போன்ற புதுப்பிக்க முடியாத இயற்கை வளங்கள் உலக அளவில் குன்றி வருகின்றன. கரியமிலவாயு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்ஸைடு மற்றும் கார்பன் மோனாக்ஸைடு போன்ற வாயுத்தனிமங்களின் அளவு ஆண்டுதோறும் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலை ஏற்பட்டுள்ளது. பருவநிலை மாற்றமானது உயிரின வகைபாடு இழப்பு, பருவமழை காலதாமதம், நோய்

நிகழ்வுகள் அதிகரிப்பு, நீர்பற்றாக்குறை, தாவர வகைகளின் அழிவு, வேளாண் உற்பத்தி குறைவு போன்ற மாற்றங்கள் ஏற்படத் தூண்டுகோலாக உள்ளது. வளிமண்டலத்தில் அதிகமாக கரியமிலவாயு உட்புகுவதன் விளைவாக ஏற்படும் தாக்கங்களைக் குறைக்கவும், பருவநிலை மாற்றங்களைக் கட்டுப்படுத்தவும், மரங்கள் மட்டுமே சிறந்த திறன்படைத்தவைகளாக உள்ளன. வனங்கள் கரியமிலவாயு வெளிப்பாட்டினைக் குறைக்கும் தலைசிறந்த வடிகாலாக விளங்குவதுடன், இப்புவியில் மனித இனம் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களைத் தாக்கும் பேரழிவுகளிலிருந்து பாதுகாக்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன.

## 3. வனம் மற்றும் மர அடர்த்திப்பரப்பு

தமிழ்நாட்டின் மொத்த வனப்பரப்பளவு 22,877 சதுர கிலோமீட்டர். இது தமிழ்நாட்டின் மொத்த புவியியல் பரப்பளவில் 17.59 விழுக்காடு ஆகும். 1988ஆம் ஆண்டின் தேசிய வனக்கொள்கையின்படி, நிலப்பரப்பில் 33.33 விழுக்காடு அளவு வனம் மற்றும் மரஅடர்த்திப்பரப்பாக இருக்கவேண்டிய நிலையில், இந்திய

வன நிலஅளவை நிறுவன (வன நிலை அறிக்கை, 2013) அறிக்கையின்படி வன அடர்த்திப் பரப்பு 23,844 சதுர கிலோ மீட்டராக உள்ளது. இது மொத்த நிலப்பரப்பில் 18.33 விழுக்காடு ஆகும். மேலும், வனம் மற்றும் மர அடர்த்திப் பரப்பு 28,710 சதுர கிலோமீட்டராக உள்ளது எனவும், இது மொத்த நிலப்பரப்பில் 22.07 விழுக்காடு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 4. வனக்கொள்கை

வனக்கொள்கை, அனைத்து உயிரினங்களின் வாழ்வாதாரத்திற்கு முக்கியத் தேவையான சூழலியல் சமநிலையினைப் பராமரித்தல், சுற்றுச்சூழல் நிலைத்தன்மையினை உறுதி செய்தல் போன்றவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டுள்ளது. நாட்டின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கினை வனம் மற்றும் மர அடர்த்திப்பரப்பின் கீழ் கொண்டு வருவது வனக்கொள்கையின் முதன்மையான குறிக்கோள்களில் ஒன்றாகும். மாநிலத்தின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வனத்துறை உரிய அனைத்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## 5. வனச்சட்டங்கள் மற்றும் விதிகள்

தொழிற்புரட்சியுடன் இணைந்த தாவர மற்றும் உயிரினப்பயன்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் வனம் மற்றும் வன உயிரினப் பாதுகாப்பில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. 1894ஆம் ஆண்டின் வனக்கொள்கையில் வனப்பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டிருப்பினும், அளவிற்கு அதிகமான வனப்பொருட்கள் மற்றும் வனஉயிரினங்களின் வணிக ரீதியான பயன்பாடு சூழலமைப்பில் கடும் சவால்களை உருவாக்கியது. மாநிலத்தின் இயற்கைப் பாரம்பரியப் பாதுகாப்பினை உறுதிசெய்வதில் தமிழ் சமுதாயத்தின் கலாச்சாரம் மற்றும் பாதுகாப்பு அணுகுமுறை அதிக பலன்களைத் தந்துள்ளது. நாட்டிலேயே தமிழ்நாட்டில் தான் முதன்முதலாக 1977ஆம் ஆண்டில் வனங்களிலிருந்து பசுமைமரங்களை வெட்டிஅகற்றுவது தடை செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மூங்கில்கள் யானையின் முக்கிய ஆதார உணவாக விளங்குவதால் இயற்கை வனங்களிலிருந்து பசுமை மூங்கில்கள் அறுவடை செய்வதும் தடைசெய்யப்பட்டது. வனப்பாதுகாப்பினைப்

பொறுத்தமட்டில் முன்னோடி மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது.

**சட்டங்கள்**

**மதராஸ் வன யானைகள் பாதுகாப்புச் சட்டம், 1873 :** காட்டுயானைகள் பாதுகாப்பிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, காட்டுயானைகளை கொல்வதைத் தடுக்க இச்சட்டம் இயற்றப்பட்டது.

**தமிழ்நாடு வனச்சட்டம், 1882 :** இச்சட்டமானது, அன்றைய சென்னை மாகாணத்தில் காடுகளை பேணிப் பாதுகாக்க மதராஸ் வனச்சட்டமாக 1882ஆம் ஆண்டிலேயே இயற்றப்பட்டது.

**தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949 மற்றும் தமிழ்நாடு மலை தல (மரப்பாதுகாப்பு) சட்டம், 1955 :** மலைப்பகுதிகள் மற்றும் தனியார் நிலங்களில் மரங்கள் வெட்டுவதை முறைப்படுத்துவதற்கென முறையே இயற்றப்பட்ட சட்டங்களாகும்.

**வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம், 1972 :** இச்சட்டமானது வன உயிரினம் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

**வனப்பாதுகாப்புச் சட்டம், 1980 :** இச்சட்டம் வனநிலங்களை வனம் அல்லாத பிற பணிகளுக்கு மாற்றம் செய்வதற்கென நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**உயிர்ப்பன்மைச்சட்டம், 2002 :** இச்சட்டம் உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் உயிர்வளப் பயன்பாட்டின் வாயிலாகக் கிடைக்கும் பலன்களை நியாயமான முறையில் பங்கீடு செய்வதெற்கென இயற்றப்பட்டது.

**பழங்குடியினர் மற்றும் இதர மரபுவழி வனவாழ் மக்கள் (வன உரிமைகள் அங்கீகரிப்பு) சட்டம், 2006 :** வனங்களில் வசித்து வரும் பழங்குடியினர் மற்றும் மூன்று தலைமுறைகளுக்கும் (75 ஆண்டுகள்) மேலாக வசித்து வரும் இதர மரபுவழி வனவாழ் மக்களுக்கு வனநிலங்கள் மீதான அவர்களது உரிமையினை அங்கீகரிக்கும் பொருட்டு இயற்றப்பட்டது. இச்சட்டத்தை செயல்படுத்துவதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

நலத்துறை ஒருங்கிணைப்புத் துறையாகவும், வனத்துறை அதற்கு உதவிபுரியும் துறையாகவும் இருந்து வருகிறது.

**விதிகள்**

அட்டவணைப்படுத்தப்பட்ட மரங்கள் உள்ளிட்ட தடிமரப்போக்குவரத்து கீழ்க்கண்ட விதிகளின் வாயிலாக ஒழுங்குபடுத்தப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு சந்தனமரப் போக்குவரத்து விதிகள், 1967.
- தமிழ்நாடு தடிமரப் போக்குவரத்து விதிகள், 1968.
- தமிழ்நாடு பெருமரம் (போக்குவரத்து கட்டுப்பாடு) ஆணை, 1982.
- தமிழ்நாடு அட்டவணை பெருமரங்களின் கணக்குப் பராமரிப்பு விதிகள், 1988.

தமிழ்நாடு வன உயிரின (போக்குவரத்து) விதிகள், 1991ன் மூலம் வன உயிரினங்களின் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

## 6. குறிக்கோள்கள்

மனித நாகரிகம் நீண்டகாலம் தழைத்தோங்க வனங்களின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி மிகவும் இன்றியமையாதது. உள்ளூர் சமுதாயத்தினரின் மனமுவந்த பங்கேற்பினால் மட்டுமே சிறந்த வனப்பாதுகாப்பு மற்றும் மேலாண்மையின் உரிய பலன்களை அடைய இயலும் என்பதை தமிழ்நாடு வனத்துறை முன்பே உணர்ந்திருந்தது. சமூக, பாதுகாப்பு மற்றும் உற்பத்தித் தேவைகளை பூர்த்தி செய்ய தமிழ்நாட்டிலுள்ள வனங்கள் பின்வரும் பரந்த குறிக்கோள்களுடன் மேலாண்மை செய்யப்படுகின்றன :-

- வனங்கள் மற்றும் வன உயிரினப்பாதுகாப்பின் மூலம் உயிர்ப்பன்மை மற்றும் மரபியல் வளப்பாதுகாப்பு.
- சதுப்புநிலப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு.
- வனப்பகுதிகளில் நீர்வள ஆதாரங்களைப் பெருக்குதல்.
- வன அடர்த்திப் பரப்பினை அதிகப்படுத்த தரங்குன்றிய காடுகளைப் புனரமைத்தல் மற்றும் இயல்பு நிலைக்கு கொண்டு வருதல்.

- வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் பருவநிலை மாற்றங்களைத் தடுக்க வனங்களுக்கு வெளியே மர அடர்த்திப் பரப்பினை அதிகப்படுத்துதல்.
- பொருளாதாரச் செழுமை மற்றும் சுற்றுச்சூழல் சமநிலையினை உறுதி செய்ய பழங்குடியினர் மற்றும் வனங்களைச் சார்ந்து வாழும் சமுதாயத்தினரின் நலன் மேம்பாடு.

## 7. செயல்முறைகள்

மேற்படி குறிக்கோள்களை அடைய, புதிய திட்டங்கள், புதிய வளர்ச்சி யுக்திகள் மற்றும் மாறிவரும் சமூகத் தேவைகளுக்கு ஏற்ப வனப்பொருட்கள் மற்றும் சேவைகள் போன்ற புதிய அணுகுமுறைகளை வனக்கொள்கை கடைபிடிக்கிறது. கீழ்க்கண்ட செயலாக்கங்களை மேற்கொள்வதன் மூலம் ஒருங்கிணைந்த வனம் சார்ந்த வளர்ச்சியினை மாநிலம் பெற வழிவகுக்கிறது :-

1. உயிர்ப்பன்மை மற்றும் மரபியல் வளப்பாதுகாப்பு.

2. நீர்ப்பிடிப்புப் பகுதி பாதுகாப்பு மற்றும் நீர் வடிப்பகுதி மேலாண்மை.
3. மிதஅடர்த்தி மற்றும் திறந்த வெளிக்காடுகளில் பருவநிலை இணக்கத் தன்மையினை அதிகரித்தல்.
4. வனப்பாதுகாப்பு.
5. வனங்களுக்கு வெளியே மர அடர்த்திப் பரப்பினை அதிகப்படுத்துதல்.
6. வனங்களை ஒட்டியுள்ள கிராமங்களின் சமூகப்பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.
7. பழங்குடியினர் மேம்பாடு.
8. சூழல் சுற்றுலா.
9. ஆராய்ச்சி, தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் விரிவாக்கம்.
10. உள்கட்டமைப்பு வசதி மேம்பாடு.
11. புவித்தகவல் அமைப்பு, மேலாண்மைத் தகவல் அமைப்பு மற்றும் மின்ஆளுமை (E-Governance) செயல்பாடு மற்றும் மேம்பாடு.
12. மனித வள மேலாண்மை.

### 7.1. உயிர்ப்பன்மை மற்றும் மரபியல் வளப்பாதுகாப்பு

வனஉயிரினப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. கடந்த ஆண்டு வரை, வன உயிரினப்பாதுகாப்பு மற்றும் உயிர்ப்பன்மை பாதுகாப்பினை பலப்படுத்தும் வகையில் 5,468 சதுர கிலோமீட்டர் பரப்பு, பாதுகாக்கப்பட்ட பகுதி மேலாண்மையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. 2013–14ஆம் ஆண்டில் மட்டும், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் கோடியக்கரை வனஉயிரினச் சரணாலயம் பகுதி ‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’, திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் வன உயிரினச் சரணாலயம், திருநெல்வேலி மாவட்டத்தில் கங்கை கொண்டான் புள்ளிமான்கள் சரணாலயம், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் காவேரி வடக்கு வன உயிரினச் சரணாலயம் என நான்கு வன உயிரினச் சரணாலயங்கள் அறிவிக்கை செய்யப்பட்டு 1,240 சதுர கிலோமீட்டர் பரப்பு பாதுகாக்கப்பட்ட பகுதி மேலாண்மையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாறாக பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் மொத்தப்பரப்பு 6,708 சதுர கிலோமீட்டராக (29.32 விழுக்காடு) உள்ளது.

பாதுகாக்கப்பட்ட பகுதி கட்டமைப்பின் கீழ் களக்காடு முண்டந்துறை, ஆனைமலை, முதுமலை மற்றும் சத்தியமங்கலம் என 4 புலிகள் காப்பகங்கள், 5 தேசிய பூங்காக்கள், 14 வனஉயிரினச் சரணாலயங்கள், 14 பறவைகள் சரணாலயங்கள் மற்றும் ஒரு பாதுகாக்கப்பட்ட ஒதுக்குப்பகுதி ஆகியவை உள்ளன. இப்பாதுகாக்கப்பட்ட பகுதிகள் வன உயிரினப் பாதுகாப்புச்சட்டம், 1972ன் கீழ் ஏற்படுத்தப்பட்டன. உயிர்ப்பன்மை செழுமைக்குப் பெயர்பெற்ற நீலகிரி, மன்னார் வளைகுடா மற்றும் அகஸ்தியர்மலை என மூன்று உயிர்க்கோள் காப்பகங்களைக் கொண்ட தனிச்சிறப்பு வாய்ந்த மாநிலமாகவும் தமிழகம் திகழ்கிறது.

மேற்குத் தொடர்ச்சி மலை உலகின் 25 முக்கியமான உயிர்ப்பன்மைத் தலங்களில் ஒன்றாகவும், இந்தியாவின் மூன்று உள்ளூர் தாவர பேரிட மையங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது. கன்னியாகுமரி, களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், ஆனைமலை புலிகள் காப்பகம், முதுமலை புலிகள் காப்பகம், முக்குருத்தி, ஸ்ரீவில்லிப்புத்தூர் மற்றும் மேகமலை வனப்பகுதிகள்

பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக உள்ளதால் தாவர மற்றும் உயிரினச் செழுமைக்குப் பெயர்பெற்று விளங்குகிறது.

கணிசமான அளவில் வனஉயிரினங்கள் மிகுந்த வாழ்விடங்கள், உள்ளூர் இனங்கள், முக்கிய உயிரினங்கள், முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பகுதிகள் மற்றும் பெரிய பாலுண்ணி வழித்தடங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இப்பாதுகாக்கப்பட்ட பகுதிகள் உள்ளன. உயிர்ப்பன்மை, கல்வி, பொழுதுபோக்கு, வரலாற்று முக்கியத்துவம், தனிச்சிறப்புமிக்க நிலப்பகுதிகள் மற்றும் கடற்பகுதிகள் போன்றவற்றின் பாதுகாப்பிற்கென மாநிலத்திலுள்ள பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மேலாண்மை செய்யப்பட்டு வருகின்றன. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டம் உயிர்ப்பன்மைப் பாதுகாப்பினை முதன்மையான குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தின் பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் மேலாண்மைத் திட்டங்களும், இதர வனக்கோட்டங்களின்

வனச்செயல்திட்டங்களும், உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளது.

வனஉயிரினப் பாதுகாப்பிற்கென தமிழ்நாட்டில் பின்வரும் உயிரியல் பூங்காக்கள் இந்திய மத்திய உயிரியல் பூங்கா குழுமத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

**(அ) வனத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள உயிரியல் பூங்காக்கள்**

1. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர், சென்னை.
2. கிண்டி சிறுவர் பூங்கா, சென்னை.
3. அமிர்தி உயிரியல் பூங்கா, வேலூார்.
4. குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா, சேலம்.
5. திருச்சி உயிரியல் பூங்கா, திருச்சி.

**(ஆ) மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள உயிரியல் பூங்காக்கள்**

1. வ.உ.சி. சிறு உயிரியல் பூங்கா, கோயம்புத்தூர்.
2. சிவகங்கை சிறு உயிரியல் பூங்கா, தஞ்சாவூர்.

### (இ) தனிநபர் கட்டுப்பாட்டிலுள்ள உயிரியல் பூங்காக்கள்

1. மதராஸ் முதலைப் பண்ணை அறக்கட்டளை / ஊர்வன மையம், மகாபலிபுரம்.
2. சென்னை பாம்புப் பண்ணை அறக்கட்டளை, கிண்டி, சென்னை.

## 7.2. நீர்ப்பிடிப்புப் பகுதி பாதுகாப்பு மற்றும் மேலாண்மை

மண், நீர் மற்றும் பிற இயற்கை வளங்களைப் பாதுகாப்பதே நீர்ப்பிடிப்புப் பகுதி மேலாண்மையின் குறிக்கோளாகும். தமிழ்நாடு வற்றாத மற்றும் வற்றக்கூடிய ஆறுகளைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் முக்கிய ஆறுகள் மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, கிழக்கு திசை நோக்கி பாய்கின்றன. மாநிலத்தின் பெரும்பாலான முக்கியமான ஆறுகளின் நீர்ப்பிடிப்புப்பகுதிகள் வனங்களில் அமைந்துள்ளன. மாநிலத்திலுள்ள 32 ஆறுகள், 11 பெரிய நீர்த்தேக்கங்கள் மற்றும் 61 பெரிய பாசனக்கட்டமைப்புகளின் நீர்ப்பிடிப்புப்பகுதிகளில் 85 விழுக்காடு, வனங்களில் அமைந்துள்ளன. அரிய நீர்வளத்தினை சேகரிக்கும்

பொருட்டு, தாழ்வான நீரோட்டப்பகுதிகளில் தடுப்பணைகள் மற்றும் கசிவுநீர்க்குட்டைகள் போன்ற பெரிய நீர்சேகரிப்புக் கட்டமைப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. இக்கட்டமைப்புகள் சேகரிப்புக் கொள்கலன்களாக செயல்படுவது மட்டுமின்றி, நிலத்தடி நீர்வளத்தினை செறிவூட்டல் மற்றும் இயற்கை ஊற்றுகளின் மறுசெறிவூட்டல் போன்றவற்றிற்கு ஊக்குவிப்பானாகவும் செயல்படுகின்றன. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், தேசிய காடு வளர்ப்புத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற முக்கிய காடு வளர்ப்புத் திட்டங்கள் இந்த அணுகுமுறையைப் பின்பற்றி வருகின்றன. இவ்வாறே, நீரை சேகரித்து நிலத்தடி நீரூற்றுகளை செறிவூட்ட தரங்குன்றிய வனப்பகுதிகளில் நீர் பாதுகாப்பு மற்றும் மர அடர்த்தி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 7.3. மித அடர்த்தி மற்றும் திறந்தவெளிக்காடுகளில் பருவநிலை இணக்கத்தன்மையினை அதிகரித்தல்

உலக வெப்பமயமாதலுடன் தொடர்புடைய தட்பவெப்பநிலை மற்றும் மழைப்பொழிவில் ஏற்படும்

மாற்றங்கள் வனங்களின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தவல்லது. இன்றைய காலகட்டத்தில் பருவநிலை மாற்றத்தினைப் பொறுத்தவரை, வனங்களில் கார்பன் சேமிப்புத்திறன் மற்றும் பருவநிலை மாற்றத் தணிப்பில் அதன் பங்களிப்பு மீது அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. முதன்மைக்காடுகளின் பாதுகாப்பு மற்றும் தரங்குன்றி வரும் வனச்சூழலமைப்பினை இயல்பு நிலைக்குக்கொண்டு வருதல் போன்றவை (i) மனிதத் தலையீடுகள் மற்றும் (ii) தவிர்க்க முடியாத பருவநிலை மாற்றத்தினைக் குறைப்பதில் முக்கிய பங்காற்றி வருகின்றன. பருவநிலை இணக்கத்தன்மையினை அதிகரிக்க, (i) மண் அரிமானத் தடுப்பு மற்றும் நீர்க்கசிவு அதிகரிப்பு போன்றவற்றிற்காக நீரறு பள்ள அடைப்பு (Gully plugging), சமதளக்குழிகள் (Contour trenches), தாவரத்தடுப்புகள் (Vegetative barriers), நீர்ப்பிடிப்புக் குழிகள் போன்ற மண் மற்றும் ஈரப்பதப் பாதுகாப்புப் பணிகள், (ii) களையெடுப்பதன் வாயிலாக ஊடுருவிய அயற்தாவர வகைகளை நீக்குதல், (iii) இயற்கை மறுதளிர்வுக்கு உதவிபுரிய இடைநடவு மேற்கொள்ளுதல்

போன்ற பணிகள் முக்கியமாக தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், தேசிய காடு வளர்ப்புத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பருவநிலை இணக்கத்தன்மையினைப் பெருக்க நிலஅமைப்பு அடிப்படையில், தெரிவு செய்யப்பட்ட வனங்களில் 'பசுமை இந்தியா பணித்திட்டம்' (Green India Mission) தொடங்கப்பட்டுள்ளது.

### 7.4. வனப்பாதுகாப்பு

மாநிலத்தின் வனங்களுக்கு மனிதத் தலையீடுகளால் ஊறு விளைவிக்கப்படுவதுடன், பல்வேறு காரணிகளால் வனவளங்கள் தொடர்ந்து இன்னல்களுக்கு உட்படுத்தப்படுகின்றன. சட்டவிரோதமாக மரங்களை வெட்டுதல், வனத் தீ, வனநிலங்கள் ஆக்கிரமிப்பு, சந்தனமரம், செம்மரக்கடத்தல், மேய்ச்சல், கஞ்சா பயிரிடுதல், மருத்துவத்தாவரங்கள் களவாடப்படுதல் மற்றும் வன உயிரினங்கள் வேட்டையாடப்படுதல் போன்றவை மாநிலத்தின் வனவளப் பாதுகாப்பிற்கு

தொடர்ந்து சவால்களாக விளங்குகின்றன. சட்டத்திற்குப் புறம்பான இச்செயல்களை தடுக்க துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் நல்ல பலனைத் தந்துள்ளன. வனக்குற்றங்களைக் கட்டுப்படுத்த தற்போது பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவின் கீழ் 13 வனப்பாதுகாப்புப் படைகள், வடக்குக்குழு ( 7 வனப்பாதுகாப்புப் படைகள்) மற்றும் தெற்குக்குழு (6 வனப்பாதுகாப்புப் படைகள்) என இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும், 5 பறக்கும் படைகளும் இதற்கென இயங்கி வருகின்றன. மாநிலம் முழுவதும் 17 வன நிலையங்கள், 112 வனச்சோதனைச் சாவடிகள் மற்றும் 11 சுழல் தணிக்கைச் சாவடிகளும் முக்கியமான மற்றும் பதட்டமான இடங்களில் இயங்கி வருகின்றன. துறையின் வனப்பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவானது, வனம் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் குறித்து சேகரித்த தகவல்களை சம்பந்தப்பட்ட கோட்டங்களுக்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அனுப்பி வைக்கிறது. நவீனத் தடுப்புமுறைகள் மற்றும் ரோந்து யுக்திகள், குற்ற முறைமைகளைக் கையாளுதல் போன்றவற்றில் வனப்பணியாளர்களுக்கு சிறப்புப் பயிற்சி

அளிக்கப்படுகிறது. எல்லைக்கற்களை நட்டு வன எல்லைகளை ஒருங்கிணைத்தல், ஏற்கனவே உள்ள தீக்கோடுகள் பராமரிப்பு மற்றும் புதிய தீக்கோடுகள் வெட்டுதல் போன்றவற்றின் மூலம் வனத்தீத்தடுப்பு, கூட்டு வன நிர்வாகக் குழுக்களை ஏற்படுத்தி உள்ளூர் மக்களை தீத்தடுப்புப் பணிகளில் ஈடுபடுத்துதல், வறண்ட காலங்களில் தீத்தடுப்புக் காவலர்களை வழக்கமான அடிப்படையில் பணியமர்த்தல் தீக்கண்காணிப்பு கோபுரங்கள் கட்டுதல் மற்றும் வேட்டைத்தடுப்புக் காவலர்களை பணியமர்த்தல் போன்ற பாதுகாப்புப் பணிகளும் இதில் அடங்கும். வனம் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாப்பதில், துறையின் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு முக்கிய பங்காற்றியுள்ளது.

## 7.5. வனங்களுக்கு வெளியே மர அடர்த்திப் பரப்பினை அதிகப்படுத்துதல்

சூழலமைப்பினை மேம்படுத்த நாட்டின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு மர அடர்த்திப் பரப்பினைக் கொண்டு வர வேண்டும் என **1988**ஆம் ஆண்டின் தேசிய வனக்கொள்கை வலியுறுத்துகிறது. வனப்பரப்பினை அதிகரிக்க போதுமான வழிவகை

இல்லாத காரணத்தினால், வனங்களுக்கு வெளியே மர அடர்த்திப் பரப்பினை அதிகரிக்க அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இக்குறிக்கோளினை எய்த, தனியார் பண்ணை நிலங்கள், தரிசு நிலங்கள், கண்மாய்கள், பிற புறம்போக்கு நிலங்கள், சாலையோரங்கள், இருப்புப் பாதையோரங்கள் மற்றும் கால்வாய்க்கரைகள் போன்ற பிற பொதுநிலங்களிலும், வனங்களுக்கு வெளியேயும் மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இலாபகரமானதாகவும், வறட்சியைத் தாங்கக்கூடியதாகவும் உள்ள மரக்கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்படுகின்றன.

காற்றின் மாசினைக் குறைத்தல், ஒலியின் மாசினைக் குறைத்தல், கார்பன் கிரகிப்பு மற்றும் கால்வாய்க் கரைகளில் மண்அரிப்பினைத் தடுத்தல் போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் பலன்களை அடைவது மட்டுமின்றி, வனப்பொருட்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வனப்பகுதிகளுக்கு வெளியே மர வளங்களை உருவாக்குவதே மையக்கருத்தாக உள்ளது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் உதவி பெறும்

தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நடைமுறைப்படுத்தப்படும் மாபெரும் மரம் நடவுத் திட்டம், படுகை நிலங்களில் தேக்கு மரத்தோட்டங்கள் வளர்த்தல், கண்மாய் தோட்டங்கள் வளர்த்தல் போன்ற முக்கிய திட்டங்கள் தேசிய இலக்கான **33.33** விழுக்காடு மர அடர்த்திப் பரப்பினை அடைய செயல்படுத்தப்பட்டு வருகின்றன**.** இத்திட்டங்கள் விறகு மரம் மற்றும் தடிமரத்தின் எதிர்கால தேவை மற்றும் ஆதாரத்திற்கு இடையேயுள்ள இடைவெளியைக் குறைக்க உறுதுணையாக இருக்கும்**.**

## 7.6. வனங்களை ஒட்டியுள்ள கிராமங்களின் சமூகப்பொருளாதார மேம்பாடு

வனங்களை ஒட்டியுள்ள கிராமங்களில் வசிக்கும் மக்கள் தங்களது வாழ்வாதாரத்திற்கு பண்ணைகளையும், வனங்களையும் சார்ந்தே இருக்க வேண்டியுள்ளது**.** வனங்களின் தரங்குன்றுதல் காரணமாக வனங்களை ஒட்டியுள்ள சமுதாயத்தினர் வாழ்வாதார வழிமுறைகளை இழக்க நேரிடுவதால், ஏழ்மை நிலை வேரூன்றுகிறது**.**

வனங்களை ஒட்டியுள்ள கிராமங்களில் உள்ள மக்களின் நம்பிக்கை மற்றும் மதிப்பினை பெறுவதற்குண்டான சீரிய முயற்சிகளை வனத்துறை மேற்கொண்டு வருகிறது. வனத்துறை வழக்கமான பாதுகாப்புப் பணிகள் மட்டுமின்றி வளர்ச்சிப்பணிகளை மேற்கொண்டு வரும் துறையாக மாறிவருவதை இக்கிராமங்களில் வசிக்கும் மக்கள் உணர்ந்து வருகின்றனர்.

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்த தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் இரண்டு கட்டங்களிலும், வனங்களை ஒட்டியுள்ள **2,317** கிராம மக்களின் உளமார்ந்த பங்கேற்புடன் கூட்டு வன நிர்வாகத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. உயிர்ப்பன்மை பாதுகாப்பிற்கு வறுமை ஒழிப்பே முக்கிய வழியெனக் கொண்டு, அனைத்து தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்ட கிராமங்களிலும் இடைதாங்கு மண்டலப் பணிகளை மேற்கொண்டது. வறுமை ஒழிப்புத் திட்டங்களில் ஏழைகளைச் சென்றடைய நுண்கடன் முக்கிய பங்காற்றி வருகிறது. எனவே, அப்பகுதி மக்கள் வனங்களைச் சார்ந்து வாழ்வதைக் குறைக்கவும், மாற்று வேலை

வாய்ப்பினைத் தேர்ந்தெடுக்கவும், இடைதாங்கு மண்டலப் பணிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் கிராம வனக்குழு உறுப்பினர்களுக்கு 67% கடனாக வழங்கப்பட்டு வருகிறது. இது வரை கடனாக வழங்கப்பட்ட தொகையான ரூ.114.77 கோடியில், திரும்பப் பெறப்பட்ட தொகை ரூ.83.52 கோடி (73%) ஆகும். கடந்த மூன்றாண்டுகளில் ரூ.11.90 கோடி கடனாக வழங்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், நிலையான வாழ்வாதாரத் தேவையான மாற்று வேலை வாய்ப்பு வழிமுறைகளை உருவாக்குவதில் வலுவான தடை தகர்க்கும் முயற்சிகளை மேற்கொண்டது. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் அரசின் பிற துறைகள் ஒருங்கிணைப்பின் விளைவாக, வனம் மற்றும் அதனைச் சார்ந்து வசிக்கும் சமுதாயத்தினரின் மேம்பாட்டிற்கென அதிக ஆதாரங்கள் மற்றும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் இரண்டு கட்டங்களின் கீழ் பெறப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் தற்போதைய

அணுகுமுறை கையாளப்படுகிறது. வனங்களை ஒட்டி வாழும் கிராம மக்களின் இணக்கமான சூழ்நிலைக்கான மேம்படுத்தப்பட்ட வாய்ப்புகள், வனப்பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டில் அவர்களது பங்கேற்புக்கான முயற்சிகளில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. இதற்கான அணுகுமுறை, (i) சமுதாய மூலதனத்தை ஏற்படுத்த தனிநபர் வருமானப் பெருக்கம் மற்றும் (ii) இயற்கை வள ஆதார நடவடிக்கைகளை முன்னிறுத்தி இயற்கை மூலதனப் பெருக்கப்பணிகள் போன்ற இரு ஆதாரங்களின் அடிப்படையில் அமையும். பாரம்பரியத் திறன்கள் மற்றும் உள்ளார்ந்த அறிவாற்றல் போன்றவை பாதுகாப்புப்பலன்களுக்கு பயன்படுத்தப்படும்.

## 7.7. பழங்குடியினர் மேம்பாடு

பழங்குடியினர் இயற்கை வளங்களை அழிக்காமல், அவற்றை நிலையான முறையில் பயன்படுத்தி இயற்கையோடு இணக்கமாக வாழ்ந்து வருவதுடன் வன மேலாண்மை மற்றும் வனப்பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் வனத்துறைக்கு உதவிபுரிகின்றனர். பழங்குடியினர் வனங்களுடன் இணைந்து இருப்பதால், பழங்குடியினர்

மற்றும் வனங்களின் உயிர்வாழ்வு ஒன்றுக்கொன்று பயனளிப்பதாக உள்ளது. அரசின் கொள்கைகளும், பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த சிறப்புத் திட்டங்களின் அவசியத்தினை வலியுறுத்துகின்றன. எனவே, பழங்குடியினருக்கு கல்வி, வேலை வாய்ப்புப் பெருக்கம் மற்றும் பல்வேறு அடிப்படை வசதிகளை வழங்குதல் போன்ற பணிகளில் வனத்துறை ஈடுபட்டு வருகிறது. 1951ஆம் ஆண்டிலேயே வனத்துறையால் ஜவ்வாது மலைவாழ் பழங்குடியினருக்கு ஜம்னாமரத்தூரில் துவங்கப்பட்ட தொடக்கக்கல்வி பிற கிராமங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. திருவண்ணாமலை, வேலூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் பகுதிகளில் 20 பள்ளிகளை நடத்தி வரும் தமிழ்நாடு வனத்துறை குறிப்பாக பழங்குடியினருக்கு தலைசிறந்த கல்வியினை வழங்க அதிக அக்கறை செலுத்தி வருகிறது. இப்பள்ளிகளில் 4500க்கும் மேற்பட்ட மாணவ– மாணவியர்கள் கல்வி பயில்கின்றனர். வனத்துறை நடத்தி வரும் பழங்குடியினர் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பில், முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ–மாணவியருக்கு பரிசுத்தொகை

வழங்கப்பட்டுள்ளது. வனங்களின் ஓர் அங்கமாகத் திகழும் பழங்குடியினர் தேவைகளை உணர்ந்து, அவர்கள் சிறுவனப்பொருட்களை இலவசமாக சேகரிக்கவும், பயன்படுத்தவும், ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. வனத்துறையானது அனைத்து முக்கிய காடு வளர்ப்பு மற்றும் வளர்ச்சிப்பணிகளிலும் பழங்குடியினரின் சேவைகளைப் பயன்படுத்தி வருகிறது. இதன் வாயிலாக வனப்பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியில் அவர்களது பங்கேற்பும், வனங்களில் இயைந்த உயிர்வாழ்வும் சாத்தியமாகும்.

### 7.8. சூழல் சுற்றுலா

மாறுபட்ட புவியியல் அமைப்பு மற்றும் தட்பவெப்ப மண்டலங்களுடன், எழில், கலைநயம், சமூகப் பண்பாடு மற்றும் கல்வி அடிப்படையில் இயற்கையினை அதன் உன்னத நிலையில் கண்டுகளிக்க பல்வேறு பகுதிகளைத் தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது. தென்னிந்தியாவில் உள்ள தொட்டபெட்டா போன்ற சில உயரமான சிகரங்கள், கடலோர சமவெளிகள், சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள், முத்துப்பேட்டை

மற்றும் பிச்சாவரம் போன்ற சதுப்புநிலப்பகுதிகள் மற்றும் கடலோர மணற்குன்றுகள் உள்ளிட்ட வனப்பகுதிகள் சூழல் சுற்றுலா வழிவகைகளை மேம்படுத்த அதிக வாய்ப்புகளைப் பெற்றுள்ளன. இயற்கைத் தலங்களைப் பாதுகாத்து வந்தபோதிலும், உள்ளூர் மக்களுக்கு கணிசமான வாழ்வாதாரங்களை உருவாக்கும் மிகப்பெரிய ஆற்றல் சூழல் சுற்றுலாவிற்கு உள்ளது. சூழல் சுற்றுலா என்பது இயற்கையின் அடிப்படையில் அமைந்த, நிலைத்து நிற்கக்கூடிய சூழல் மற்றும் சமூகத்தினரால் ஏற்றுக்கொள்ளத்தக்க பணியாகக் கருதப்படுகிறது. இப்பணி சுற்றுச்சூழல் பாதுகாப்பு மேம்பாடு மற்றும் உள்ளூர் பொருளாதார வளர்ச்சி மற்றும் பொழுதுபோக்கு அனுபவத்தினை மேம்படுத்துவதாக அமைகிறது. வெற்றிகரமான சூழல் சுற்றுலாவிற்கு, பார்வையாளர்களுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், வனப்பணியாளர்களுக்கு திறன் அதிகரிப்பு மற்றும் பயிற்சித் திட்டங்கள், விளம்பரம், வரவேற்பு மையங்கள் ஏற்படுத்துதல், பார்வையாளர்களுக்கு வாகன வசதிகள், பறவைகள் மற்றும் உயிரினச்சரணாலயங்களில் கண்காணிப்பு

கோபுரங்கள், தொலைநோக்கிகள் மற்றும் பார்வையாளர்களுக்கு சூழல் வழிகாட்டிகள் வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 7.9. உள்கட்டமைப்பு வசதி மேம்பாடு

வனத்துறை சிறப்பான முறையில் இயங்க கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரிப்பு, உபகரணங்கள், செயல்விளக்க மையங்கள், பணியாளர் குடியிருப்புகள் மற்றும் வாகனங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியமான ஒன்றாகும். அதே நேரத்தில் வனப்பகுதியில் உள்ள உள்கட்டமைப்புகளான சாலைகள், வீட்டுவசதி, பள்ளிகள் மற்றும் மருந்தகங்களை மேம்படுத்துவதும் அவசியமாகும். வனத்துறையில் பெரும்பாலான பணியாளர்கள் தொலைதூரப் பகுதிகளில் பணியாற்றுவதால், குடியிருப்பு, அலுவல் குடியிருப்பு, பாதுகாப்புக் கட்டமைப்புகளான சோதனைச்சாவடிகள், வேட்டைத்தடுப்பு முகாம்கள் மற்றும் கண்காணிப்புக் கோபுரங்கள் போன்றவை தேவைக்கேற்ப அமைக்கப்படுவதுடன், ஏற்கனவே உள்ள

துறைக்கட்டடங்களின் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

வனத்துறையின் கட்டுப்பாட்டில் **1,631.5** கி.மீ. நீளமுள்ள சிமெண்ட், தார் மற்றும் கல் பரப்பிய சாலைகள், **1,718.5** கி.மீ. நீளமுள்ள மண் சாலைகள், உள்ளிட்ட **3,350** கி.மீ. நீளமுள்ள வனச்சாலைகள் உள்ளன. வனப்பகுதிகளில் பாதுகாப்புப் பணியாளர் மற்றும் தொழிலாளர் போக்குவரத்து, தடிமர மற்றும் பிற வனப்பொருட்களை அருகிலுள்ள சந்தைக்கு எடுத்துச் செல்வதற்கு வனச்சாலைகளின் மேம்பாடு மற்றும் பராமரிப்பு அவசியமாகிறது. மேலும், உள்ளடங்கிய வனப்பகுதிகளில் உயர்அலுவலர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்களின் காலமுறைத் தணிக்கைகள், சட்டவிரோதமாக மரம் வெட்டுதல் மற்றும் விலையுயர்ந்த தடிமரங்களின் கடத்தல்கள் போன்றவற்றைத் தடுக்கவும், வனச்சாலைகளின் மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகள் தேவைப்படுகிறது. தகவல் தொடர்பு வசதிகளை பலப்படுத்த, பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள களப் பணியாளர்களுக்கு வாகனங்கள், ஜி.பி.எஸ். உபகரணங்கள் (GPS), செல்போன்கள் போன்ற தகவல்

தொடர்பு சாதனங்களை வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 7.10. வன ஆராய்ச்சி, தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் விரிவாக்கம்

வலுவான ஆராய்ச்சி ஆதாரங்களின் மூலமே நம்பகமான மற்றும் உறுதியான வன மேலாண்மைத் தொகுப்புகள் மற்றும் செயல்முறைகளை எட்டமுடியும். வனங்களின் தாக்கத்தினை உணர்ந்த பின்பு, சூழலியல் பாதுகாப்பு, எரிசக்தி மற்றும் வேலை வாய்ப்புகளுக்கான அறிவியல் சார்ந்த வனவியல் ஆராய்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. தனியார் நிலங்களில் மரங்கள் வளர்க்க உதவி புரிதல், விதை உயிரியல், மருத்துவத் தாவரங்கள் பாதுகாப்பு, சிறுவனப் பொருட்கள் மற்றும் அறுவடைக்குப் பின் பின்னேர்த்தி செய்யும் தொழில்நுட்பம் போன்ற நவீனப்பரிமாண வனப்பணிகளுக்கு புதிய உத்வேகத்தை அளித்துள்ளது. வனப்பாதுகாப்பு, உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு மற்றும் உற்பத்தித்திறன் அதிகரிப்பு ஆகிய முக்கிய நோக்கங்களுடன் தமிழக வன ஆராய்ச்சிப் பிரிவு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வகை

ஆராய்ச்சிகள் மேற்கொள்வதன் மூலம் மக்கள் பயனடையும் வண்ணம் அதிக அளவில் நன்மைகளையும் சேவைகளையும் வழங்குகிறது. பல்நோக்கு மரவகைகள், மரம் சாரா வனப்பொருட்கள் மற்றும் மரவியல், உயிர்ப்பன்மை பாதுகாப்பு, சூழலியலின் இயல்புநிலை, மண் உயிர்சத்து மேலாண்மை, மருத்துவத் தாவரங்கள் மேம்பாடு மற்றும் பராமரிப்பு, உயிர் உரங்கள் தயாரிப்பு, அறுவடைக்குப் பின் பின்னோர்த்தி செய்யும் தொழில்நுட்பம் போன்ற முக்கிய பகுதிகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வனஆராய்ச்சியின் சிறப்பான சாதனைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் களத்திற்கு பரிமாற்றம் செய்யப்படும்.

தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் இயற்கை வள ஆதாரங்களை அதிகரிக்க பல்வேறு வகையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உரிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. வனங்களுக்கு வெளியே மரஉற்பத்தியினை அதிகரிக்க முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. பல்வேறு வேளாண் பருவநிலை பகுதிகளில் உற்பத்தி வனவியல் மற்றும் வேளாண்

வனவியல் ஆகியவற்றில் மேலாண்மைத் தலையீடுகள் அவசியமாகிறது. மரவணிகம் மற்றும் மரங்களல்லாத வனப்பொருட்கள் மேலாண்மையில் ஆராய்ச்சி தொடங்கப்பெற்றுள்ளது. உண்ணிச்செடி மற்றும் வேலிக்கருவேல் போன்ற அயற்தாவர வகைகள் மீதும் ஆராய்ச்சி மேற்கொள்ள வலியுறுத்தப்பட்டுள்ளது.

## 7.11. புவித்தகவல் அமைப்பு, மேலாண்மைத்தகவல் அமைப்பு மற்றும் மின்ஆளுமை (E-Governance) செயல்பாடு மற்றும் மேம்பாடு

வனவியல் என்பது மனித வள மேம்பாடு, நிலம் சார்ந்த தகவல், திட்டம் தொடர்பான செயல்பாடுகள், உற்பத்திப்பொருட்கள் மற்றும் சேவைகள், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம், பொதுப்பயன்கள் குறித்த விரிவான தகவல்தொகுப்புகளை உள்ளடக்கியது. வனவியல் பிரிவில் திட்டமிடுதல், மேலாண்மை மற்றும் கண்காணிப்பு போன்றவற்றில் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு முக்கிய பங்காற்றி வருகிறது. எனவே, சிறந்த வன மேலாண்மை நடைமுறைக்கு புவித்தகவல் அமைப்பு இன்றியமையாததாக உள்ளது. இத்தொழில்நுட்பத்தின் குறிப்பிட்ட செயல்முறைகள் வன அடர்த்திப்பரப்பு /

வகைபாடு வரைபடம் மற்றும் மாற்றப் பகுப்பாய்விலும், மாவட்ட வாரியான வன வரைபடத் தயாரிப்பிலும், வனத் தீ கண்காணிப்பிலும், வனச்செயல் திட்டம் / மேலாண்மைத் திட்ட தயாரிப்பிலும் செவ்வனே பயன்படுத்தப்பட்டு வருகிறது. செயற்கைக்கோள் பிம்பத்தொலையுணர்வு மற்றும் புவித்தகவல் அமைப்பு உதவியுடன் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் மின்னணு வன வரைபடங்கள் தயாரிக்கப் பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கிழக்குத்தொடர்ச்சி மலை மற்றும் மேற்குத்தொடர்ச்சி மலை முழுவதற்கும் செயற்கைக்கோள் பிம்பத்தினைப் பயன்படுத்தி வனத் தீ வரைபடங்கள் தயாரிக்கும் பணி முடிவடைந்துள்ளது. இவ்வரைபடங்கள் கோட்டங்களில் வனத் தீ மேலாண்மைக்கு உதவிபுரிகின்றன. மேலாண்மைத் தகவல் அமைப்பு என்பது முறையான மற்றும் சிறப்பான மேலாண்மைப் பணிகளுக்கான ஒரு மிக முக்கியமான சாதனமாகும். இது காலமுறை முன்னேற்றத்தினைக் கண்காணித்தல், உரிய நேரத்தில் தீர்வு காணுதல் போன்றவற்றில் உதவிபுரிகிறது. துறையின் தகவல் மேலாண்மைக்கு உதவிபுரிய, நிர்வாகத்தில் தகவல் தொழில் நுட்பத்தினை

செம்மையாகப் பயன்படுத்துவது தவிர்க்க இயலாதது. தமிழ்நாடு வனத்துறையினை தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் மாற்றியமைக்க, எளிதில் பயன்படுத்தும் வகையில் இணைய அடிப்படையிலான மேலாண்மைத் தகவல் அமைப்பு மென்பொருள் உருவாக்கப்பட்டு வருகிறது. தேசிய மின்ஆளுமை செயல் திட்டம் மற்றும் மைய அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையினால், தமிழ்நாடு மாநில பரந்த பகுதி வலையமைப்பு பிரதான மின்ஆளுமை முதுகெலும்புக் கட்டமைப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள சமீபத்திய வளர்ச்சிகளை முறையாகப் பயன்படுத்தி, பரந்த பகுதி வலையமைப்புடன் கூடிய நிறைவான மேலாண்மைத்தகவல் அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஒருங்கிணைக்கப்பட்ட காணொளி இணையம் அமைக்கப்படுவதோடு வனத்துறைப் பணியாளர்களின் திறனை மேம்படுத்த பயிற்சிகள் அளிக்கப்படும்.

### 7.12. மனித வள மேலாண்மை

வனவியல் பிரிவில் முக்கிய பங்காற்றி வரும் மனித வளம், வனத்துறையின் மிக முக்கியமான உடைமைகளில் ஒன்றாக அமைந்துள்ளது. மாநிலத்தின் மிகப்பழமையான துறைகளில் தமிழ்நாடு வனத்துறையும் ஒன்றாகும். மாநிலத்தில் வனங்களின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியில் பல ஆண்டுகளாக திறம்படைத்த மனித வளத்தின் வாயிலாக வனத்துறை குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளது. தற்போது கோயம்புத்தூரில் தமிழ்நாடு வன உயர்பயிற்சியகம் மற்றும் வைகை அணையில் தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கல்லூரி ஆகிய இரு பயிற்சி நிலையங்களை, துறையிலுள்ள முதுநிலை, இடைநிலை மற்றும் இளநிலை அளவில் உள்ள பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கென வனத்துறை நடத்தி வருகிறது. கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வன உயர்பயிற்சியகத்தில் வனச்சரக அலுவலர்களுக்கும், வனவர்களுக்கும் மற்றும் வைகை அணையிலுள்ள தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கல்லூரியில் வனக்காப்பாளர்களுக்கும், வனக்காவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வனம் மற்றும் வன

உயிரினப் பாதுகாப்பின் போது உருவாகும் சவால்களை திறம்பட மேற்கொள்வதற்கான வனப்பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அலுவலர்கள், சார்நிலைப்பணியாளர்கள், அமைச்சுப் பணியாளர்கள், கிராம வனக்குழு உறுப்பினர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் போன்றவர்களுக்கு உரிய கால அளவிலான / புத்தாக்கப் பயிற்சிகள் மேம்பட்ட தாவர உற்பத்தித் தொழில்நுட்பங்கள், வன உயிரின மேலாண்மை, சட்ட நுணுக்கங்கள், உயிர்ப்பன்மை பாதுகாப்பு, ஆயுதப்பயன்பாடு, தீ கட்டுப்படுத்தல், கையடக்க ஜி.பி.எஸ். உபகரணங்கள் (GPS) மற்றும் புவித்தகவல் அமைப்பு பயன்பாடு, கட்டடப்பணிகள், மரத்தொழில்நுட்பம் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

## 8. 2013–14ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

- தமிழ்நாட்டில் முதன்முறையாக ஓர் ஆண்டிற்குள் நான்கு வன உயிரினச் சரணாலயங்கள் அறிவிக்கை செய்யப்பட்டு, **2013–14**ஆம் ஆண்டு வன உயிரினப் பாதுகாப்பு வரலாற்றில்

பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஆண்டாக விளங்குகிறது.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாட்டு உயிரியல் குழுமத்தின் கட்டுப்பாட்டிலுள்ள உயிரியல் பூங்காக்களில் மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ள ரூ.6.94 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- **ஆபரேஷன் மலை:** திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் சேலம் மாவட்டங்களிலுள்ள குடியிருப்புப் பகுதிகளில் நெடுங்காலமாக அதிக அளவில் சேதங்கள் விளைவித்து வந்த 6 காட்டு யானைகள் கொண்ட கூட்டம் ஒன்று ஒரே முயற்சியில் பிடிக்கப்பட்டு, பின்னர் இடமாற்றம் செய்யப்பட்டன. இப்பணி முழுவதும் நமது மாநிலத்தில் உள்ள உள்ளூர் பணியாளர் மற்றும் அவர்களது நிபுணத்துவம் வாயிலாக 60 மணி நேரத்தில் ஒரு சாதனையாக நிறைவேற்றப்பட்டது. இந்த அளவிடற்கரிய சாதனைப் பணியானது, வனத்துறை மற்றும் பிற

இணைதுறையிலுள்ள அலுவலர்கள் உள்ளிட்ட **367** பணியாளர்கள் மற்றும் **5** கும்கி யானைகளின் உதவியுடன் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. பிடிபட்ட **6** காட்டுயானைகளும் மறுவாழ்விற்கென முதுமலை மற்றும் ஆனைமலை முகாம்களுக்கு அனுப்பப்பட்டன.

- வனத்துறைக்குச் சொந்தமான **55** யானைகளுக்கு தேக்கம்பட்டி, முதுமலை, ஆனைமலை, வண்டலூர் உயிரியல் பூங்கா, சேலம் குரும்பப்பட்டி பூங்கா ஆகிய இடங்களில் ரூ.**92.75** லட்சம் செலவில் **48** நாட்களுக்கு சிறப்பு நல மற்றும் புத்துணர்வு முகாம்கள் சிறப்பாக நடத்தப்பட்டன. முறையான தினசரி உணவுடன் **9** மருத்துவ குணம் கொண்ட உணவு வகைகளும், பல்வேறு பசுந்தழைகளும் ஊட்டச்சத்து நிறைந்த உணவும் துறை யானைகளுக்கு வழங்கப்பட்டன. இம்முகாம்கள் சமத்துவத்தையும், யானைகளுக்கு இனிமையான அனுபவத்தை ஏற்படுத்தியதோடல்லாமல்,

யானைகள் சிறந்த மன நிலையுடன் கூடிய முன்னேற்றத்தையும் பெறப் பயன்பட்டது.

- அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் ரூ.20 லட்சம் செலவில் வன அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

- **பவளப்பாறைகள் மீட்பு:** இந்தியாவிலுள்ள மிக முக்கிய நான்கு பவளப்பாறைப் பகுதிகளில் மன்னார் வளைகுடா ஒன்றாகும். 'பவளப்பாறைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புத் திட்டத்தின்' கீழ் பவளப்பாறை சூழலமைப்பினை இயல்பு நிலைக்கு கொண்டு வர மன்னார் வளைகுடா தேசிய பூங்காவின் வேம்பார் குழுவைச் சேர்ந்த புலுவினிசல்லி தீவு மற்றும் தூத்துக்குடி குழுவைச் சேர்ந்த காசுவாரி தீவுகளில் பவளப்பாறை மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஊதியமானது ரூ.4000/–லிருந்து ரூ.6750/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

- **298.34** டன் சந்தனமரக்கட்டைகள் பொது ஏல விற்பனை மூலம் அரசுக்கு வருவாயாக ரூ.**137.07** கோடி ஈட்டப்பட்டுள்ளது.

- **3448.76** கன மீட்டர் தேக்கு மரக்கட்டைகள் பொது ஏல விற்பனை செய்ததன் மூலம் அரசுக்கு வருவாயாக ரூ.**11.53** கோடி ஈட்டப்பட்டுள்ளது.

- **2011–12** மற்றும் **2012–13**ஆம் ஆண்டுகளில், சமூகக்காடுகள் விற்பனை மூலம் ரூ.**31.99** கோடியும், **2013–14**ஆம் ஆண்டில், ரூ.**17.97** கோடியும் வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது. **2012–13**ஆம் ஆண்டில் சமூகக்காடுகள் விற்பனையில் ஊராட்சிகளுக்கான பங்குத் தொகையாக ரூ.**6.80** கோடி வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

- **645.30** எக்டேர் பரப்பிலான நிலங்கள் காப்புக்காடுகளாகவும், **1498.81** எக்டேர் நிலங்கள் காப்பு நிலங்களாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

- வனத்துறையில் சட்டப்பிரிவினைப் பலப்படுத்த மூன்று வழக்குரைஞர் (குற்றவியல்–1 மற்றும் உரிமையியல்–2) பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 9. வனத்துறையின் பொன்னான தருணங்கள்

### உலக அளவில் அங்கீகாரம்

- புவியியல், கலாச்சார, இயற்கை எழில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைக் கொண்ட மேற்குத் தொடர்ச்சி மலை உலக அளவில் மிக அதிக முக்கியத்துவம் வாய்ந்த உயிர்ப்பன்மை பாதுகாப்புப் பகுதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது 25 உலகார்ந்த உயிர்ப்பன்மை பேரிடங்களில் ஒன்றாகவும், 3 உள்ளூர் தாவர பெருமையங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது.

- 2002–03ஆம் ஆண்டில் மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பகம் யுனெஸ்கோ (UNESCO) கட்டமைப்பில் இடம் பெற்றது.

- **2002–03**ஆம் ஆண்டில் கோடியக்கரை வன உயிரினச்சரணாலயம் உலக அளவில் முக்கிய சதுப்பு நிலமாக ராம்சர் இடம் (Ramsar site) என அறிவிக்கப்பட்டது.

**வன அடர்த்திப்பரப்பில் முன்னேற்றம்**

**2013**ஆம் ஆண்டின் இந்திய வனநில அளவை நிறுவன அறிக்கையில் **2011**ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்ட வன அடர்த்திப்பரப்பின் அளவைவிட **219** சதுர கிலோமீட்டர் அதிகரித்துள்ள விவரம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**அதிகரித்த புலிகள் எண்ணிக்கை**

வன உயிரினப்பாதுகாப்புச் சட்டம், **1972**ன் கீழ் அரிதாகி வரும் வன உயிரினங்கள் பாதுகாக்கப்பட்டும், பராமரிக்கப்பட்டும் வருகின்றன. இச்சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டு வரும் புலிகளின் எண்ணிக்கை **76**ல் இருந்து கணிசமாக உயர்ந்து **2011** கணக்கெடுப்பின் படி **163** ஆக அதிகரித்துள்ளது. **2012–13**ஆம் ஆண்டில் புலிகள் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கும்

வகையில் சத்தியமங்கலம் வன உயிரினச்சரணாலயம், தமிழ்நாட்டின் நான்காவது புலிகள் காப்பகமாக அறிவிக்கை செய்யப்பட்டது.

**புகழ்வாய்ந்த உலகப்பாரம்பரியமிக்க இயற்கைத் தலங்கள் பட்டியலில் இடம்பெற்ற மேற்குத் தொடர்ச்சி மலை**

யுனெஸ்கோ (UNESCO) நிறுவனத்தின் உலகப்பாரம்பரியக்குழு (World Heritage Committee), 2012–13ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள 39 இடங்களை உலகப்பாரம்பரியமிக்க இயற்கைத் தலங்கள் (World Heritage Sites) பட்டியலில் பதிவு செய்துள்ளது. அவற்றுள் எண்ணற்ற தாவர மற்றும் விலங்கினக் களஞ்சியங்களாகத் திகழும் திருநெல்வேலி கோட்ட வனப்பகுதிகள், களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், ஸ்ரீவில்லிப்புத்தூர் வன உயிரினக் காப்பகம், ஆனைமலை புலிகள் காப்பகத்திலுள்ள புல்மலை மற்றும் கரியன்சோலை பகுதிகள் மற்றும் முக்குருத்தி தேசிய பூங்கா ஆகியவை அடங்கும்.

**கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வன உயர் பயிற்சியகத்தின் மகத்தான 100 ஆண்டுகள்**

**1912**ஆம் ஆண்டில் மதராஸ் வனக்கல்லூரி எனத்தொடங்கப்பட்ட கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வன உயர்பயிற்சியகம் (முன்னாள் தென் பிராந்திய வனச்சரகர்கள் கல்லூரி), **1990** முதல் தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. வனப்பயிற்சியாளர்களுக்கு குறிப்பாக வனச்சரக அலுவலர்களுக்கு வனவியலில் பயிற்சியளிக்கும் தென் ஆசிய புராதன கல்வி நிறுவனங்களில் ஒன்றான இக்கல்வி நிறுவனம் **2012–13**ஆம் ஆண்டில் **100** ஆண்டுகளைக் கடந்து வரலாறு படைத்தது. தென் பிராந்திய வனச்சரகர்கள் கல்லூரி கடந்த **2005**ஆம் ஆண்டில் 'தமிழ்நாடு உயர்பயிற்சியகமாக' தரம் உயர்த்தப்பட்டது. இக்கல்வி நிறுவனம் **5074** வனச்சரகர்களுக்கும், **1302** வனவர்களுக்கும் பயிற்சியளித்துள்ளது. மேலும், இந்நிறுவனம் இந்திய வனப்பணி அலுவலர்கள் மற்றும் உதவி வனப்பாதுகாவலர்களுக்கு குறுகிய கால பணியிடைப்பயிற்சியையும் வழங்கி வருகிறது.

**களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்திற்கு அகவை 25**

- மேற்குத்தொடர்ச்சி மலையின் முக்கிய உயிர்ப்பன்மைத் தலமாக விளங்கும் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் 2013–14ஆம் ஆண்டில் 25 ஆண்டுகளை நிறைவு செய்தது. புலிகள் திட்டம் தொடங்கப் படுவதற்கு முன்னரே புலிகள் பாதுகாப்பிற்கென 1962ஆம் ஆண்டில் முண்டந்துறை வனஉயிரினச் சரணாலயம் நாட்டின் முதல் புலிகள் சரணாலயமாக அறிவிக்கப்பட்டது. அருகிவரும் சிங்கவால் குரங்குகள் பாதுகாப்பிற்கென களக்காடு வன உயிரினச் சரணாலயம் 1976ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. 1988ஆம் ஆண்டில் அருகருகே அமைந்துள்ள இரு வனஉயிரினச் சரணாலயங்களான முண்டந்துறை மற்றும் களக்காடு வனஉயிரினச் சரணாலயங்கள் இந்தியாவின் 17வது புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டது.

- **களக்கல்வி பயிலும் மையம் :** உள்ளூர் மக்களின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் மேம்பட்ட பாதுகாப்பிற்காக **1994** முதல் **2001** வரை உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட சூழல் மேம்பாட்டுத் திட்டத்தின் பலன்களைக் கருத்தில் கொண்டு, **2011**ஆம் ஆண்டில் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தினை பங்கேற்பு உயிர்ப்பன்மை பாதுகாப்பின் 'களக்கல்வி பயிலும் மையமாக' உலக வங்கி அங்கீகரித்துள்ளது.

- **தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணைய விருது : 2012–13**ஆம் ஆண்டில் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் 'சிறந்த இணைந்திருத்தல் மற்றும் இடைதாங்கு மண்டல மேலாண்மைக்கான' விருதினைப் பெற்றுள்ளது.

**குறைந்த அளவு மாற்றம் செய்யப்பட்ட வனநிலங்கள்**

பல்வேறு சட்டங்களை தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருவதால், தமிழ்நாடு எப்போதும் அனைத்து பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு செயல்பாடுகளில் முன்னோடியாக விளங்குகிறது. நாட்டிலேயே குறைந்த அளவு வனநிலங்களை வனமற்ற பணிகளுக்கு மாற்றம் செய்துள்ள மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். 30 ஆண்டுகளுக்குப் பின்பும் 371 இனங்களில் சுமார் 4,458 எக்டேர் பரப்பு மட்டுமே வனமற்ற பணிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**10. வன வருவாய் மற்றும் செலவினம்**

**வன வருவாய்**

சந்தன மர விற்பனை, தடிமர விற்பனை மற்றும் பண்ணைக் காடுத்தோட்டங்கள் விற்பனை போன்றவை, வருவாய்க்கான முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன (இணைப்பு–1). பட்டுப்போன சந்தன மரங்கள் மட்டுமே விற்பனைக்காக பிரித்தெடுக்கப்படுகின்றன. அரசின் தீர்மானத்திற்கேற்ப ஆண்டுதோறும் 30 ஆண்டுகளுக்கும்

மேலான முதிர்ந்த தேக்கு மரங்கள் அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. சீகை மற்றும் தைல மரத்தோட்டங்களிலிருந்து பெறப்படும் மூலப்பொருட்கள், குறிப்பிட்ட காகித மற்றும் பிற தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. வருவாயினை அதிகரிக்க, நீர்ப்பாசனக்குளங்களில் வளர்க்கப்படும் கருவேல் மரங்கள் ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

**செலவினம்**

காடு வளர்ப்பு, மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, பல்வேறு சரணாலயங்கள் மற்றும் புலிகள் காப்பகங்களில் வாழ்விட மேம்பாட்டுப் பணிகள், வனச்செல்வங்களைப் பாதுகாப்பதில் தீவிரம் காட்டுதல், ஊரக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற அனைத்து வளர்ச்சித் திட்டங்களுமே சிறப்பான முறையில் தொடரப்பட்டு வருகின்றன. வரவுசெலவுத் திட்டத்தில் இத்திட்டங்களுக்கான உரிய நிதி ஒதுக்கீடு விவரங்கள் இணைப்பு—2ல் கொடுக்கப் பட்டுள்ளது.

## 11. 2014–15 ஆம் ஆண்டில் தொடரும் முக்கியத் திட்டப்பணிகள்

### மாநில அரசின் திட்டங்கள் :

### 11.1. தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம்

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் **2011–12**ஆம் ஆண்டு முதல் ரூ.**686** கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் 'தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம்' **2018–19**ஆம் ஆண்டு வரை தொடரப்படும். வனப்பாதுகாப்பின் வாயிலாக உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் வனங்களை ஒட்டியுள்ள கிராமங்களில் வசிப்பவர்கள் மற்றும் பழங்குடியின சமுதாயத்தினரின் சமூகப்பொருளாதார மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. வனங்களுக்கு வெளியே தனியார் நிலங்களில் மர வளர்ப்புப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் மர அடர்த்திப் பரப்பினைஅதிகரிக்க மாநிலம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு இது உதவிபுரியும். **2013–14**ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.**96.80** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. **2014–15**ஆம் ஆண்டில்

ரூ.143.69 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**11.2. தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டம் நிலை–2**

வனங்களை ஒட்டியுள்ள கிராமங்களில் உள்ள வனம் சார்ந்து வாழ்வோர் மற்றும் சமுதாயத்தில் பின்தங்கியுள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தவும், தரங்குன்றிய வனங்களை அவர்களது பங்கேற்புடன் இயல்பான நிலைக்குக் கொண்டு வரவும், மிகப்பெரிய அளவிலான கூட்டு வன நிர்வாக அடிப்படையில் தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டம் நிலை–II, ரூ.567.42 கோடி மதிப்பீட்டில் 2005–06ஆம் ஆண்டு முதல் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டது. 2005–06 முதல் 2012–13 வரையான காலத்தில் இத்திட்டத்தின் கீழ் 1,77,500 எக்டேர் தரங்குன்றிய வனப்பகுதிகளில் காடு வளர்ப்பு மற்றும் 150 பழங்குடியினர் கிராமங்கள் உள்ளிட்ட வனங்களை ஒட்டி அமைந்துள்ள 800 கிராமங்களில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவி:** தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டம் நிலை–**2**ன் செயல்பாடுகளை நிலைநிறுத்த, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமைக் கடன் தொகையில் எஞ்சியுள்ள தொகையினைப் பயன்படுத்தி, இரண்டாண்டு பயன்பாட்டுத் திட்டம் ஒன்று சுமார் ரூ.**50** கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மாநில அரசு நிதி:** தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டம் நிலை–**2**ன் கீழ் **2011–12** மற்றும் **2012–13**ஆம் ஆண்டுகளில், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை–**1** பகுதிகளில் ரூ.**27.34** கோடி செலவில் தோட்ட பராமரிப்புப் பணிகள் மற்றும் மண்வளப்பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. **2013–14**ஆம் ஆண்டில் ரூ.**12.28** கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. **2014–15**ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

### 11.3. மாபெரும் மரம் நடவுத் திட்டம்

மாநிலத்தின் பசுமைப் போர்வையினை அதிகரிக்கவும், மரவளர்ப்பினை மக்கள் பங்கேற்பு இயக்கமாக மாற்றவும், **2011–12**ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் **64**வது பிறந்தநாளை முன்னிட்டு ரூ.**27.22** கோடி செலவில் மாநிலம் முழுவதும் **32** மாவட்டங்களில் **64** லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்து மாபெரும் மரம் நடவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. **2012–13** முதல் **2014–15** வரையிலான காலத்தில் ரூ.**43.55** கோடி மதிப்பீட்டில் மாநிலம் முழுவதும் **32** மாவட்டங்களில் **65** லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யும் இத்திட்டம் தொடர்ந்து செயலாக்கப்பட்டு வருகிறது. மார்ச் **2014**, வரையான காலத்தில் ரூ.**23.15** கோடி செலவில் **65** லட்சம் மரக்கன்றுகள் மாநிலம் முழுவதும் நடவு செய்யப்பட்டு, தொடர்ந்து பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் **66**வது பிறந்த நாளினை முன்னிட்டு மாநிலம் முழுவதும் **32** மாவட்டங்களில் **66** லட்சம் மரக்கன்றுகள்

நடவு செய்யும் மாபெரும் மரம் நடவுத் திட்டத்தினை **2013–14** முதல் **2015–16** வரையான மூன்றாண்டுகளுக்கு ரூ.**49.18** கோடி செலவில் செயல்படுத்திட ஒப்புதல் வழங்கப்பட்டு மரக்கன்றுகள் நடும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

### 11.4. படுகை நிலங்களில் தேக்கு மரத்தோட்டங்கள் உற்பத்தி செய்தல்

மாநிலத்தில் தடிமர ஆதாரங்களை உருவாக்குவதும், காப்புக்காடுகளுக்கு வெளியே மர அடர்த்திப் பரப்பினை அதிகரிப்பதும், கால்வாயின் கரைகளில் மண் அரிமானத்தைத் தடுப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். **2013–14**ஆம் ஆண்டில், ரூ.**13.41** கோடி ஒப்பளிக்கப்பட்டு, தஞ்சாவூர், திருவாரூர், திருச்சி, திண்டுக்கல் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள படுகை நிலங்களில் பராமரிப்புப்பணிகளும், **8,863** எக்டேர் பரப்பில் தேக்குமரத் தோட்ட வளர்ப்புப் பணிகளும், மேற்கொள்ளப்பட்டுள்ளது. **2014–15**ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப் படவுள்ளது.

**11.5. மரக்கன்றுகள் இலவசமாக வழங்குதல்**

**2013–14**ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.**93** லட்சம் செலவில் உற்பத்தி செய்யப்பட்ட **9.76** லட்சம் மரக்கன்றுகள் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் குடியிருப்புகளில் நடுவதற்கென இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் **2014–15**ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

**11.6. 13வது நிதிக்குழு மானியம்**

**2010–11** முதல் **2014–15** வரையிலான காலத்தில் வனங்களைப் பராமரிக்க தமிழ்நாட்டிற்கு ரூ.**142.48** கோடி மானிய உதவி வழங்கிட **13**வது நிதிக்குழு பரிந்துரை செய்துள்ளது. வனம் மற்றும் உயிர்ப்பன்மைப் பாதுகாப்பில் மாநிலத்தின் பொறுப்பிற்கு உதவி புரிவதும், நிதி ஆதாரத்தினை வழங்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். **2013–14**ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.**35.62** கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. **2014–15**ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தினை ரூ.**35.62** கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 11.7. தானே புயலால் பாதித்த பகுதிகளில் மறு உற்பத்தி திட்டம்

'தானே புயலால் பாதித்த பகுதிகளில் மறு உற்பத்தி' திட்டத்தின் கீழ் கடலூார் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் மரங்களை இழந்த கடலோரப் பகுதிகளை இயல்பு நிலைக்கு கொண்டு வர **2012–13** முதல் நான்காண்டுகளுக்கு ரூ.**14.96** கோடி செலவில் தேக்கு, சவுக்கு, தைல மர வகைகளை நடவு செய்திட அரசு ஒப்புதல் வழங்கியது. இது வரை இத்திட்டம் ரூ.**11.11** கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. **2014–15**ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் பராமரிப்புப் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 11.8. நீர் வளப்பாதுகாப்பு மற்றும் மர அடர்த்தி மேம்பாட்டுத் திட்டம்

தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் பெரிய அளவில் நீர் சேகரிப்புப்பணிகளை மேற்கொள்வதற்கென விரிவானத் திட்டம் ஒன்று ரூ.**50** கோடி மதிப்பீட்டில் **2012–13**ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மண்ணின் ஈரப்பதத்தினை மேம்படுத்துதல், நிலத்தடி நீரூற்றுக்களை செறிவூட்டல் மற்றும் சாகுபடிப் பணிகளுக்குத் தேவையான நீர்வள இருப்பினை அதிகரித்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். தமிழ்நாட்டில் இத்திட்டம் கோயம்புத்தூர், தர்மபுரி, திண்டுக்கல், கன்னியாகுமரி, மதுரை, நாமக்கல், சேலம், திருவள்ளூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2014–15ஆம் ஆண்டில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 11.9. இயற்கை பாதுகாப்புத் திட்டம்

கிண்டி தேசியப்பூங்காவில் உள்ள கூண்டுகளை மேம்படுத்துதல், வனங்கள் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாக்க சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் வைகை அணையிலுள்ள தமிழ்நாடு வனவியல் பயிற்சிக்கல்லூரியில் தாவரஉண்ணிகளுக்காக தீவனப்பயிர் தோட்டம் ஏற்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்வது இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

**2013–14**ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட தொகையான ரூ.**67** லட்சத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. **2014–15**ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.**1.38** கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப் படவுள்ளது.

## 11.10. வனஉயிரினங்களால் ஏற்படும் பாதிப்பிற்கு இழப்பீடு வழங்குதல்

மக்கள்தொகைப் பெருக்கம் மற்றும் தொழில்மயமாக்கல் காரணமாக வன உயிரின வாழ்விடங்கள் சிறுசிறு பகுதிகளாக்கப்பட்டதால் வனஉயிரினங்கள் வனத்தை விட்டு மனித வாழ்விடங்களில் உட்புகுகின்றன. இதனால் மனித வனஉயிரின மோதல்கள் உருவாகின்றன. இதனை சமாளிக்க போர்க்கால அடிப்படையில் எளிதில் பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பகுதிகளில் உரிய தடுப்புகள் அமைத்தல், தீவன வளங்களைப் பெருக்குதல், வன உயிரினங்களுக்கு குடிநீர் வசதி செய்து தருதல், மனித உயிரிழப்புகள், கால்நடைகள், வேளாண் பயிர் மற்றும் உடமைகள் சேதங்களுக்கு உரிய காலத்தில் நிவாரணம் வழங்குதல் போன்றவை இன்றியமையாததாகும். **2011–2012**ஆம் ஆண்டில் இந்த அரசு மனித உயிரிழப்பு

மற்றும் நிரந்தரமான ஊனங்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத்தொகையினை ரூ.1.50 லட்சத்திலிருந்து ரூ.3 லட்சமாகவும், பயிர் சேதங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15 ஆயிரத்திலிருந்து ரூ.25 ஆயிரமாகவும் உயர்த்தியுள்ளது. மேலும், வன உயிரினங்களினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கிட ரூ.2.50 கோடியில் "சுழல் நிதி" ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2013–14ஆம் ஆண்டில், பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.3.40 கோடி இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. இந்த அரசு மனித–வனஉயிரின மோதலைத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருவது மட்டுமின்றி, வனஉயிரினங்களால் பாதிப்பு ஏதேனும் ஏற்படின் உடனடியாக நிவாரணம் வழங்கிடவும் தகுந்த ஏற்பாடுகளை செய்துள்ளது.

### 11.11. ஆசிய யானைகளால் ஏற்படும் இழப்புகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்

மனித–வனஉயிரின மோதல்கள் ஒரு சிக்கலான பிரச்சனையாக இருப்பதால், இதனை மேலாண்மை செய்திட நீர்வளங்களை மேம்படுத்துதல் மூலம் வாழ்விடங்கள் மேம்பாடு, வனஉயிரினங்கள் விரும்பி

உணவாகக் உட்கொள்ளும் தீவன வளங்களை வனப்பகுதிகளுக்குள் ஏற்படுத்துதல், வன எல்லைகளைச் சுற்றிலும் தடுப்புகள் ஏற்படுத்துதல், கிராம மக்களின் செயல்திறன் வளர்த்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் மனித உயிரிழப்புகள், கால்நடைகள், வேளாண்பயிர்கள் மற்றும் உடமைகள் பாதிப்புகளுக்கு உரிய காலத்தில் இழப்பீடுகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு யுக்திகளைக் கையாள வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் **2013–14**ஆம் ஆண்டில் ரூ.**32.18** கோடி ஒப்பளிக்கப்பட்டு, வேலூர், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், நீலகிரி, தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, திண்டுக்கல், திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் **744** கிலோமீட்டர் நீளத்திற்கு யானை புகா அகழிகள் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர, கசிவுநீர்க்குட்டைகள், தடுப்பணைகள் மற்றும் நீர்த்தொட்டிகள் அமைத்தல், யானை புகா அகழிகள் பராமரிப்பு, முன்னெச்சரிக்கை அமைப்பு, மின்தடை எச்சரிக்கை மணி அமைப்பு, மயக்க மருந்து செலுத்துதல் (Tranquilizing) மற்றும் வேலூர், சேலம் மற்றும் தர்மபுரி மண்டலப் பகுதிகளில் தொல்லை

தரும் யானைகளை இடம்பெயரச் செய்தல் போன்ற பிற பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2014–15ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் பராமரிப்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 11.12. வனப்பகுதிக்குள் வனஉயிரின வாழ்விடங்களில் தீவன வளங்கள் ஏற்படுத்துதல் மற்றும் மேம்பாடு

யானைகள் நடமாட்டத்தினை வனத்திற்குள்ளேயே கட்டுப்படுத்த, காப்புவனப் பகுதிகளில் பசுந்தீவன வங்கி ஏற்படுத்துதல், யானைகளின் தாதுக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய உப்புக்கட்டிகளைப் பயன்படுத்துதல், நீர்க்குழிகள் அமைத்தல், கோடைக்காலங்களில் அவைகளின் நீர்த்தேவைகளை பூர்த்தி செய்ய தடுப்பணைகள் மற்றும் கசிவுநீர்க்குட்டைகள் அமைத்தல் ஆகிய பணிகளை வனத்துறை மேற்கொண்டுள்ளது. 2011–12 முதல் 2015–16 வரையான ஐந்தாண்டு காலத்தில் ரூ.20.87 கோடி செலவில் இத்திட்டத்தினை செயல்படுத்திட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த இதுவரை ரூ.13.60 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2014–15ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.4.17 கோடி மதிப்பீட்டில் தொடரப்பட்டு வருகிறது.

## 11.13. தமிழகத்தில் குரங்குத் தொல்லையினை கட்டுப்படுத்துதல்

தமிழகத்தில் குரங்குத் தொல்லையினைக் கட்டுப்படுத்த வேளச்சேரி மற்றும் வண்டலூரில் குரங்கு பிடிக்கும் இரண்டு பிரிவுகள் அமைத்தல், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் உள்ள கால்நடை மருத்துவமனையில் ஒருங்கிணைப்பு மையம் ஏற்படுத்துதல் மற்றும் ஊட்டி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, வேலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய மறுவாழ்வு மையங்கள் அமைக்கும் பணிகள் ரூ.2.75 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 11.14. பள்ளிக்கரணை சதுப்புநிலம்

பள்ளிக்கரணை சதுப்புநிலப்பகுதி சென்னைப் பெருநகரப்பகுதியில் அமைந்துள்ள தனித்தன்மை வாய்ந்த நன்னீர் சதுப்பு நிலமாகும். இச்சதுப்புநிலப்பகுதி காஞ்சிபுரம் மாவட்டத்தின் பெருங்குடி, பள்ளிக்கரணை மற்றும் துரைப்பாக்கம் ஆகிய கிராமங்களில்

அடங்கியுள்ளது. இச்சதுப்பு நிலத்தைப் பாதுகாக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2002ஆம் ஆண்டிலேயே தொடக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். இன்றைய நிலையில் மொத்தமுள்ள 807.08 எக்டேர் சதுப்பு நிலப்பரப்பில், 690.53 எக்டேர் சதுப்பு நிலப்பரப்பு வனத்துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.

இச்சதுப்புநிலம் அதன் சூழலியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக அதனைப் பாதுகாக்க 2011–12 முதல் 2015–16 வரையிலான ஐந்தாண்டுகளுக்கு வாழ்விட மேம்பாடு, பாதுகாப்பு, ஆராய்ச்சி, கண்காணிப்பு, விளம்பரம், விழிப்புணர்வு போன்ற பல்வேறு மீட்புப்பணிகளை ரூ.15.75 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒரு விரிவான திட்டத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டது. இப்பகுதியை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டுவரும் பணிகள் கோடைக்காலத்தில் தங்குதடையின்றி நடைபெறவும், நிதி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் நன்கொடை அளிப்பவர்களிடமிருந்து கிடைக்கும் நிதியினைப் பெறவும், ’பள்ளிக்கரணை சதுப்புநில பாதுகாப்பு ஆணையம்’ என்ற

ஒரு ஆணையத்தை நிறுவ அரசு ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த இதுவரை ரூ.7.09 கோடி செலவிடப் பட்டுள்ளது. 2014–15ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**11.15. சுசீந்திரம்–தேரூர்–மணக்குடி பாதுகாப்புப் பகுதித்திட்டம்**

2011–12ஆம் ஆண்டில் பறவைகள் பாதுகாப்பிற்கென கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம்–தேரூர்–மணக்குடி ஏரிப்பகுதியினை மூன்றாண்டுகளில் மேம்படுத்த ரூ. 1.61 கோடி மதிப்பீட்டிலான ஒரு சிறப்புத் திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த இதுவரை ரூ.1.50 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 2014–15ஆம் ஆண்டில் தொடரப்படும்.

**11.16. திருச்சியில் வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் நட்சத்திர வனம் அமைத்தல்**

வண்ணத்துப்பூச்சியினங்கள் பாதுகாப்பு, யாத்ரீகர்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகளைக் கவர திருச்சி மாவட்டத்திலுள்ள ஸ்ரீரங்கத்தின் அருகில்

மேலணைக்கட்டு காப்புவனப் பகுதியில் ரூ.7.35 கோடி மதிப்பீட்டில் 10 எக்டேர் பரப்பளவில் நட்சத்திர வனம் மற்றும் வண்ணத்துப்பூச்சி பூங்கா அமைக்கும் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது வரை இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.4.72 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2014–15ஆம் ஆண்டில் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**11.17. மேம்படுத்தப்பட்ட வன உயிரின ஆராய்ச்சி நிறுவனம் நிறுவுதல்**

2012–13 முதல் 2014–15 வரையிலான 3 ஆண்டுகளில் வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா வளாகத்தில், மேம்படுத்தப்பட்ட வன உயிரின ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ரூ.27.13 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உயிரியல் இனப்பெருக்கம், விலங்குகள் பராமரிப்பு அறிவியல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பாதுகாப்புக்கல்வி, மரபியல் பரிணாம வளர்ச்சி பாதுகாப்பு, இடம்பெயரும் பறவைகள், வன உயிரின உயிர்ப்பு ஆகியவற்றிற்கான மையங்கள், வனஉயிரின தடய சோதனைக்கூடம் மற்றும் விஞ்ஞானிகளுக்கு தங்கும்

விடுதி போன்றவைகளை உள்ளடக்கியதாக இப்பயிற்சி மையம் விளங்கும். உள்கட்டமைப்பு மற்றும் இதர பணிகளுக்கென இதுவரை ரூ.1.30 கோடி செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் 2014–15ஆம் ஆண்டில் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

## 11.18. மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பகம் அறக்கட்டளை

ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிறுவன திட்ட (UNDP) நிதியுதவி 31.12.2012 உடன் நிறைவடைந்ததால், தமிழ்நாடு அரசின் நேரடிப் பராமரிப்பில் மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பக அறக்கட்டளைப் பணிகளைத் தொடர ஆண்டுக்கு ரூ.2.50 கோடி வீதம் 2013–14 முதல் 2016–17 வரையான 4 ஆண்டுகளுக்கு ரூ.10 கோடி அனுமதித்து அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 2013–14ஆம் ஆண்டில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் ஆராய்ச்சிப் பணிகள், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பயிற்சித் திட்டங்கள் மற்றும் சூழல் மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2014–15ஆம் ஆண்டிலும் இப்பணிகள் தொடரப்படும்.

**11.19. உயிரியல் பூங்காக்களை மேம்படுத்துதல்**

தமிழ்நாட்டில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா உட்பட அனைத்து உயிரியல் பூங்காக்களையும் சிறந்த முறையில் பராமரிப்பு செய்து அதனை மேம்படுத்தும் நோக்கத்தில் தமிழ்நாடு உயிரியல் பூங்கா ஆணையம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ளது. 2013–14ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகளுக்கு மாநில அரசு ரூ. 5.70 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

- குரும்பப்பட்டி, அமிர்தி மற்றும் திருச்சி உயிரியல் பூங்காக்களுக்கு தலா ரூ. 1 கோடி.
- கிண்டி சிறுவர் பூங்காவிற்கு வருகை தரும் பார்வையாளர்கள் வசதி மேம்பாட்டிற்கு ரூ.1 கோடி.
- அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வனஉயிரினங்களின் இருப்பிட இரும்புக்கதவு மற்றும் கம்பியினை மாற்ற ரூ. 1 கோடி.
- கிண்டி சிறுவர் பூங்காவில் வன உயிரின விழிப்புணர்வு மையம் ஏற்படுத்த ரூ.70 லட்சம்.

மேலும், மாநில நிதியிலிருந்து வேலூர் மாவட்டம் அமிர்தி மற்றும் திருச்சி உயிரியல் பூங்காக்கள் மேம்பாட்டிற்கு ரூ.5 கோடி அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 2014–15ஆம் ஆண்டில் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

**11.20. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர்**

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா சென்னைக்கு அருகே வண்டலூரில் 602 எக்டேர் வனப்பரப்பில் அமைந்துள்ளது. இப்பூங்காவில் 45 வகை பாலூட்டி இனங்கள், 70 வகை பறவையினங்கள் மற்றும் 29 வகை ஊர்வன இனங்கள் ஆக மொத்தம் 144 வகை வன உயிரினங்கள் அடங்கிய 1,398 விலங்குகள் பார்வைக்கு உள்ளன. இங்கு அரியவகை விலங்குகளான வெள்ளைப்புலி மற்றும் சிங்கவால் குரங்குகள் இனப்பெருக்கம் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. இவ்வுயிரியல் பூங்காவிற்கு ஆண்டொன்றுக்கு சுமார் 20 லட்சம் பார்வையாளர்கள் வருகை தந்துள்ளனர். இப்பூங்காவில் நன்கொடையாளர்கள் மூலம் நடத்தப்படும் 'விலங்குகளைத் தத்தெடுக்கும் சிறப்புத்திட்டம்'

பொதுமக்களிடையே உயிரினங்களின் மீது கருணை கொள்ளவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் ஒரு சிறந்த முயற்சியாக உருவெடுத்துள்ளது. இதன் மூலம் பொதுமக்களிடமிருந்து நிதிபெற்று விலங்குகளின் உணவு மற்றும் பராமரிப்புப் பணிகள் செய்யப்பட்டு வருகிறது. இதுவரை 128 நன்கொடையாளர்களிடமிருந்து ரூ.42.59 லட்சம் நன்கொடையாக பெறப்பட்டுள்ளது.

பார்வையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களைக் கவர்வதற்கென, வனம் மற்றும் வன உயிரினங்களைப் பற்றி அறிந்து கொள்ளவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வனம் மற்றும் வன உயிரின அருங்காட்சியகம் ரூ. 20 லட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது.

வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வண்ணத்துப்பூச்சி பூங்கா அமைக்க மத்திய அரசின் சுற்றுலா வளர்ச்சித்துறை அமைச்சகம் ரூ.5 கோடி ஒப்புதல் வழங்கியதில், ரூ.4 கோடியினை விடுவித்துள்ளது. இப்பூங்காவில் வண்ணத்துப்பூச்சி அமைப்பில் கட்டடம் கட்டுதல், நீரோடைகள் அமைத்தல், வெப்பம் மற்றும்

ஈரப்பதம் நிலைப்படுத்தும் அமைப்பு, தேன்கொண்ட பூத்தாவரம் மற்றும் தாய்த்தாவரத் தோட்டங்கள் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. 2014–15ஆம் ஆண்டில் பணிகள் தொடரப்படவுள்ளது.

**மத்திய அரசின் திட்டங்கள்**

புலிகள் திட்டத்தைத் தவிர இதர அனைத்து மத்திய அரசின் திட்டங்களுக்கு 100 விழுக்காடு நிதியினை மத்திய அரசு வழங்கி வருகிறது. 2013–14ஆம் ஆண்டில் 39 திட்டப் பணிகளுக்கு மத்திய அரசு ரூ.27.85 கோடி நிதி அளித்துள்ளது. இந்நிதியின் மூலம், தேசிய பூங்காக்கள், வன உயிரினச்சரணாலயங்கள், பறவைகள் சரணாலயங்கள், பாதுகாப்புக் காப்பகம் மற்றும் வனத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து வனப்பகுதிகளிலும் பல்வேறு வாழ்விட மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**11.21. புலிகள் திட்டம்**

தமிழ்நாட்டில் புலிகளையும் அவற்றின் வாழ்விடங்களையும் பாதுகாக்க வனத்துறை பல்வேறு

நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், கோயம்புத்தூர், திருப்பூர் மாவட்டங்களில் ஆனைமலை புலிகள் காப்பகம், நீலகிரி மாவட்டத்தில் முதுமலை புலிகள் காப்பகம் மற்றும் ஈரோடு மாவட்டத்தில் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் என 4 புலிகள் காப்பகங்கள் உள்ளன. வேட்டையாடக்கூடிய தலையாய திறன் படைத்த புலிகள் ஆரோக்கியமான சூழலமைப்பின் சின்னமாகத் திகழ்கிறது.

இத்திட்டத்திற்காக, மத்திய அரசு 100 விழுக்காடு தொடராச் செலவினத்திற்கும் (Non-recurring), 50 விழுக்காடு தொடரும் செலவினத்திற்கும் (Recurring) நிதியுதவி வழங்கி வருகிறது. தொடரும் செலவினத்தில் மீதமுள்ள 50 விழுக்காட்டிற்கு மாநில அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. 2013–14ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட ரூ.17.20 கோடி நிதியிலிருந்து வாழ்விடப்பாதுகாப்பு, சூழல் மேம்பாடு, வனஉயிரினப் பாதுகாப்பு, தீத்தடுப்புப் பணிகள், நீராதார மேம்பாடு, சுற்றுலா மேம்பாடு, மனித–வன உயிரின மோதல்

கட்டுப்பாடு நடவடிக்கை மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2014–15ஆம் ஆண்டிலும் இப்பணிகளைத் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 11.22. யானைகள் திட்டம்

நீலகிரியிலுள்ள கிழக்குத் தொடர்ச்சி மலை யானைகள் காப்பகம், கோயம்புத்தூர் யானைகள் காப்பகம், ஆனைமலை யானைகள் காப்பகம் மற்றும் பெரியார் யானைகள் காப்பகம் ஆகிய 4 யானைகள் காப்பகங்களில் யானைகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்காப்பகங்களுக்கென தனியான சட்ட அந்தஸ்து கிடையாது. ஏற்கனவே உள்ள காப்பு வனங்கள் மற்றும் சரணாலயங்களைக் கொண்ட இந்த 4 யானைகள் காப்பகங்கள் நிர்வாக வசதிக்காக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. யானைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் வாழ்விட மேலாண்மையில் முன்னிலை வகிக்கும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இத்திட்டம் யானைகளைப்

பாதுகாக்கவும், அவற்றின் இருப்பிடங்களை மேம்படுத்தவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2013–14ஆம் ஆண்டில் வனப்பகுதியில் தீத்தடுப்புப் பணிகள், நீராதாரங்களைப் பெருக்குதல், யானைகள் வாழ்விடங்களை மேம்படுத்துதல், யானைகளால் ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீட்டுத்தொகை வழங்குதல், யானைகளின் வாழ்விடங்களை மேம்படுத்த பசுந்தீவனப் பயிர்களை வளர்த்தல் போன்ற பணிகள் ஒப்பளிக்கப்பட்ட தொகையான ரூ.3.17 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2014–15ஆம் ஆண்டில் ரூ.4.12 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**11.23. மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பகம்**

மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பகம் செழுமையான உயிர்ப்பன்மைக்குப் பெயர்பெற்றதாகத் திகழ்கிறது. இராமேஸ்வரம் முதல் தூத்துக்குடி வரையிலான கடலோரப் பகுதிகளில் 21 தீவுகள் இக்காப்பகத்தில் உள்ளன. இங்கு 11 வகை சதுப்பு

நிலத்தாவரங்கள், 15 வகை கடல் புற்கள், 117 வகை பவளப்பாறைகள், 290 வகை பறவைகள், 5 வகை கடல் ஆமைகள், 6 வகை திமிங்கலங்கள், 5 வகை டால்பின் மீன்கள், 1 வகை கடல்பசு இனம், 1,145 வகை மீன்கள், 77 வகை தோலில் கண்களுடைய ஒருவகை மீன்கள், 79 வகை நத்தை மீன்கள், 153 வகை சிப்பிகள், 857 வகை சங்குகள் மற்றும் இதர உயிரினங்கள் உள்ளிட்ட சுமார் 4,223 வகையான கடல்வாழ் உயிரினங்கள் காணப்படுகின்றன.

மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பகம், மன்னார் வளைகுடா கடல் தேசியப் பூங்கா மற்றும் மன்னார் வளைகுடா பவளப்பாறைகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களின் கீழ் மேம்பாட்டுப்பணிகளை மேற்கொள்ள அரசு நிதி ஒப்பளிப்பு செய்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கடல்சார் சூழலமைப்பில் மனிதத்தலையீடுகளைக் குறைத்தல், கடல் வளத்தை நேரடியாகச் சார்ந்து வாழும் உள்ளூர் மக்களுக்கு மாற்றுவேலைவாய்ப்பு மூலம் வாழ்வாதாரத்திற்கு வழிவகுத்தல், சூழல் மேம்பாட்டுப்பணிகள், இயற்கை வளங்களைப் பாதுகாத்துப்

பராமரித்தல், கல்வி, விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகளுக்கு 2013–14ஆம் ஆண்டில் ரூ.1.13 கோடி ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் 2014–15ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை ரூ. 2.10 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**11.24. ஈர நிலப்பகுதி பாதுகாப்பு மற்றும் மேம்பாடு**

வெள்ளப்பெருக்கினைத் தடுக்கவும், கடலோர அரிமானத்தைத் தடுக்கவும், கடல் அலைச்சீற்றம் மற்றும் புயல் போன்ற இயற்கைப் பேரிடர்களின் தாக்கத்தைக் குறைக்கவும், மழைநீரைத் தேக்கி வைக்கவும், நிலத்தடி நீராதாரங்களைச் செறிவூட்டவும், நீர்வாழ் பறவைகளுக்கு அடைகாக்கும் இடமளிக்கவும், பாலூட்டிகளுக்கு உணவு உறைவிடங்கள் அளிக்கவும், பலவித மாசுக்களை அகற்றவும் கோடியக்கரை, கழுவேலி மற்றும் பள்ளிக்கரணை சதுப்புநிலங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வாழ்விட மேம்பாடு, வன உயிரினங்களின் பாதுகாப்பு, சதுப்பு நிலத்தைச் சுற்றிலும் சூழல் மேம்பாட்டுப் பணிகள், உயிரின மேம்பாடு,

விழிப்புணர்வு, ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு மற்றும் இயற்கைக் கல்வி போன்ற முக்கிய பணிகளுக்கு 2013–14ஆம் ஆண்டில் ரூ.1.01 கோடி ஒப்புதலளிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2014–15ஆம் ஆண்டில் ரூ.2.85 கோடி செலவில் இத்திட்டத்தினைத் தொடர திட்டமிடப்பட்டுள்ளது.

## 11.25. தேசிய காடு வளர்ப்புத் திட்டம்

தமிழ்நாட்டில், தேசிய காடு வளர்ப்புத் திட்டம் 2002–03ஆம் ஆண்டு முதல், 100 விழுக்காடு மத்திய அரசின் நிதியுதவி திட்டத்தின் கீழ் வன வளர்ச்சி முகமைகள் மற்றும் கூட்டு வன மேலாண்மைக் குழுக்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2002–03 முதல் 2013–14 முடிய 70,484 எக்டேர் அளவில், ரூ.112.34 கோடி மதிப்பீட்டில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2013–14ஆம் ஆண்டில், 1,800 எக்டேரில் தோட்டங்கள் வளர்த்தல், 2,094 எக்டேரில் முன்னோடிப் பணிகள், பராமரிப்புப் பணிகள் போன்றவற்றிற்கு ரூ.5.68 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டது.

மத்திய அரசால் முதல் தவணையாக ரூ.2.84 கோடி விடுவிக்கப் பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 11.26. பசுமை இந்தியா பணித் திட்டம்

பருவநிலை மாற்றத்திற்கான தேசிய செயல்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட எட்டு பணித் திட்டங்களில் "பசுமை இந்தியா" பணித்திட்டமும் ஒன்றாகும். பருவநிலை மாறுபாடு நிகழ்வு என்பது இயற்கையில் அமைந்த உயிரினம் சார்ந்த வன ஆதாரங்களின் பகிர்வு, வகை மற்றும் தரத்தினை கடுமையாக பாதிக்கும் என மேற்காணும் திட்டம் குறிப்பிடுகிறது. 2011–12ஆம் ஆண்டில் நாமக்கல் வனக்கோட்டம், கொல்லிமலை இயற்கை நிலக்காட்சியில் (Landscape) பசுமை இந்தியாவுக்கான தேசியப்பணித்திட்டத்தினை செயல்படுத்த இணைப்புத் திட்டமாக மத்திய அரசு ரூ.72 லட்சம் ஒப்பளிப்பு வழங்கியதில், இது வரை ரூ.70 லட்சம் இத்திட்ட செயலாக்கத்திற்கென செலவிடப்பட்டுள்ளது.

## 11.27. மருத்துவத் தாவரங்களின் பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் தொடர்ச்சியான மேலாண்மை

மருத்துவத் தாவரங்களின் பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் தொடர்ச்சியான மேலாண்மை குறித்த திட்டமானது மத்திய அரசின் 100 சதவீத நிதியுதவி பெறும் திட்டமாகும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக புதுதில்லியில் உள்ள தேசிய மருத்துவத் தாவர வாரியம் ரூ.3.37 கோடி மதிப்பீட்டில் 5 வனக்கோட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

## மத்திய மற்றும் மாநில அரசுகள் பங்கேற்கும் திட்டங்கள்

## 11.28. முனைப்புடன் செயல்படுத்தப்படும் வன மேலாண்மைத் திட்டம்

இத்திட்டம் முன்பு மத்திய அரசு உதவியுடன் ஒருங்கிணைந்த வனப்பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டமாகச் செயல்படுத்தப்பட்டது. வனத்தீயினைக் கட்டுப்படுத்த வனப்பாதுகாப்பினை பலப்படுத்தி வனவளங்களைப் பாதுகாத்தல், எல்லைக்கற்கள் நடுதல் மூலம் ஆக்கிரமிப்புக்களைத் தடுத்து வன எல்லைகளை வரையறுத்தல், சாலைகளை மேம்படுத்துதல்,

மேம்படுத்தப்பட்ட தகவல் தொடர்பு வசதிகள் அளித்தல், வனக்கோட்ட மேலாண்மைக்கான அறிவியல் ரீதியான வனச்செயல் திட்டம் தயாரித்தல் போன்றவை இத்திட்டத்தின் முக்கிய இனங்களாகும்.

ஏற்கனவே நடைமுறையில் இருந்த ஒருங்கிணைந்த வனப்பாதுகாப்புத் திட்டத்தினை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், மத்திய அரசு இத்திட்டத்தினை 'முனைப்புடன் செயல்படுத்தப்படும் வன மேலாண்மைத் திட்டம்' எனப்பெயர் மாற்றம் செய்துள்ளது. ஏற்கனவே உள்ள செயலாக்கப் பணிகளுடன் புனிதத்தலங்களில் உள்ள மரங்கள் அடர்ந்த சோலைகளைப் பாதுகாத்துப் பேணுதல், தனித்தன்மை வாய்ந்த காடுகள் மற்றும் சூழல் அமைப்புகளை இயல்பு நிலையில் பராமரித்துப் பாதுகாத்தல், வனப்பகுதிகளை ஆக்கிரமித்துள்ள அந்நியத்தாவரங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் அகற்றுதல், மூங்கில் பூப்பதால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள தயார்நிலையில் இருத்தல் மற்றும் மூங்கில் காடுகள் மேலாண்மையை மேம்படுத்துதல் போன்ற நான்கு புதியவகை செயலாக்கப்

பணிகளும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. **2014–15**ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.**4.20** கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 11.29. பகுதி– II திட்டங்கள்

**2013–14**ஆம் ஆண்டில், ரூ.**2.50** கோடி மதிப்பீட்டில் 7 பகுதி இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளது. **2014–15**ஆம் ஆண்டில், ரூ.**3.23** கோடி மதிப்பீட்டில் **14** புதிய மற்றும் புதுமையான பகுதி இரண்டு திட்டங்கள் தொடர்ந்து செயலாக்கப்படவுள்ளது (இணைப்பு–**3**).

## 12. வனக்கழகங்கள்

### 12.1. தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம், திருச்சிராப்பள்ளி

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் **13.06.1974** அன்று இந்திய நிறுவனங்கள் சட்டம், **1956**ன் படி திருச்சிராப்பள்ளியை தலைமையிடமாகக் கொண்டு நிறுவப்பட்டது. இக்கழகம் ரூ.**10** கோடி அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டையும், ரூ.**5.64** கோடி செலுத்தப்பட்ட முதலீட்டையும் கொண்டுள்ளது. இக்கழகத்தின் மொத்த பங்கு முதலீடும் தமிழ்நாடு அரசுக்கு சொந்தமானதாகும்.

சுமார் 75,000 எக்டேர் பரப்பிலுள்ள காப்புக்காடுகள் மற்றும் பாதுகாப்பு வனங்கள், தமிழ்நாடு வனத்துறையிடமிருந்து குத்தகை அடிப்படையில் எடுக்கப்பட்டது. அரசாணையின் படி, குத்தகைத்தொகையாக ஆண்டுதோறும் மொத்த விற்பனைத் தொகையில் 30 விழுக்காடு வனத்துறைக்கு செலுத்தப்பட்டு வருகிறது. தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் கூழ்மரத் தோட்டங்கள் மற்றும் முந்திரித் தோட்டங்கள் வளர்த்து, பராமரித்து, அறுவடை செய்வதும், வனங்களின் உற்பத்தியினை அதிகரிப்பதும், ஊரக வேலைவாய்ப்பினை வழங்குவதும், மண் மற்றும் நீர்வளத்தினைப் பாதுகாப்பதும், பொதுமக்களுக்கு தேவைப்படும் எரிபொருள் மரத்தேவைகளை பூர்த்தி செய்வதுமே இக்கழகத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

### 12.1.1. சாதனைகள்

2012–13 மற்றும் 2013–14ஆம் ஆண்டுகளில் எழுப்பப்பட்ட தோட்டங்கள் மற்றும் செலவின விவரங்கள் இணைப்பு–4ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 12.1.2. கூழ்மரம்

2012–13 மற்றும் 2013–14ஆம் ஆண்டுகளில் காகித ஆலைகளுக்கு விநியோகம் செய்யப்பட்ட கூழ்மரங்களின் விவரம் இணைப்பு–4ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 12.1.3. முந்திரி

தமிழ்நாடு வனத்தோட்டக்கழகத்தில் அதிக அளவு வருவாயை ஈட்டுவதில் முந்திரி இரண்டாவது இடத்தை வகிக்கிறது. வருவாய் ஈட்டப்பட்ட விவரங்கள் இணைப்பு–4ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 12.1.4. வருவாய் மற்றும் செலவினம்

2012–13, 2013–14 மற்றும் 2014–15ஆம் ஆண்டுகளுக்கான கழகத்தின் வருவாய் மற்றும் செலவின விவரங்கள் இணைப்பு–5ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 12.1.5. 2014–15ஆம் ஆண்டுக்கான பிரேரணைகள்

2014–15ஆம் ஆண்டில் எழுப்பப்படவுள்ள புதிய தோட்டங்கள் மற்றும் செலவின விவரங்கள் இணைப்பு–5ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 12.2. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம், குன்னூர்

சாஸ்திரி – ஸ்ரீமாவோ உடன்படிக்கையின்படி, இந்தியா திரும்பிய இலங்கை அகதிகளின் மறுவாழ்விற்காக, சமூகப் பொருளாதார நோக்கத்துடன், தேயிலைத் தோட்டங்களை உருவாக்க 1968ஆம் ஆண்டில், தமிழக அரசால் அரசு தேயிலைத்திட்டம் ஏற்படுத்தப்பட்டு, வனத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டது. பின்னர் தற்போது டான்டீ என்று பலராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், இந்திய நிறுவனச் சட்டம், 1956ன் கீழ் ஒரு அரசு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.15 கோடி ஆகும். இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.9.96 கோடியாகும். இக்கழகத்தின் மொத்த பங்கு முதலீடும் தமிழ்நாடு அரசுக்கு சொந்தமானதாகும். தேயிலைத் தோட்டங்களை

அமைப்பதும், தேயிலைத் தோட்டங்களில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு மறுவாழ்வளிப்பதும் முக்கிய குறிக்கோள்களாகும்.

இக்கழகம் தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிலங்களை குத்தகைக்கு எடுத்து **4311.04** எக்டேர் நிலப்பரப்பில் தேயிலைத்தோட்டங்களை நான்கு நிலைகளில் பராமரித்து வருவது குறித்த விவரங்கள் இணைப்பு–**6**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 12.2.1. பசுந்தேயிலை மற்றும் பதப்படுத்தப்பட்ட தேயிலை

**2012–13** மற்றும் **2013–14**ஆம் ஆண்டிற்கான பசுந்தேயிலை மற்றும் பதப்படுத்தப்பட்ட தேயிலையின் செயல் சாதனை விவரங்கள் இணைப்பு–**6**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 12.2.2. வருவாய் மற்றும் செலவின விவரங்கள்

வருவாய் மற்றும் செலவின விவரங்கள் இணைப்பு–**6**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 12.2.3. 2013–14ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள்

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவிப்பின் பேரில், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழக தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.40 லட்சங்கள் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் தேயிலை தொழிற்சாலைகளை நவீனப்படுத்தவும், அடிப்படைக் கட்டமைப்பினை மேம்படுத்தவும் மூலதனப் பணிகளை மேற்கொள்ள, செலுத்திய மூலதனத்தை ரூ.4 கோடியாக உயர்த்தி ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்தொகை ஏப்ரல் 2013ல் இக்கழகத்திற்கு வழங்கப்பட்டது. இதன் மூலம் 23 இயந்திரங்கள் வாங்கப்பட்டு

நிர்மானம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், தொழிலாளர் குடியிருப்புக்கான 40 தொகுப்பு கழிவறைகள் கட்டப்பட்டு வருகின்றன.

- பசுந்தேயிலை அறுவடை, அறுவடை செய்ய தொழிலாளர்களை பயன்படுத்துதல், உற்பத்தித்திறனை அதிகரிக்க களத்தில் மாதாந்திர இலைபறிப்புத் திறன் மற்றும் தொழிலாளர்களின் சராசரி இலைபறிப்புத்திறன் போன்றவை மீது தனிக்கவனம் செலுத்தி வருவாயை உயர்த்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால், சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு பசுந்தேயிலை அறுவடை 50 இலட்சம் கிலோவாகவும், பதப்படுத்தப்பட்ட தேயிலை 12 இலட்சம் கிலோவாகவும் உயர்ந்துள்ளது. அதே போன்று, தொழிலாளர்களின் தினசரி சராசரி

உற்பத்தித்திறன் 38.32 கிலோவிலிருந்து 43.17 கிலோவாக அதிகரித்துள்ளது.

- டேன்டீ குயின்சோலா மற்றும் பாண்டியார் தேயிலைத் தொழிற்சாலைகளில் உற்பத்தித்திறனை பெருக்கும் வகையில் கண்காணிப்பை மேம்படுத்த கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேயிலைத்தூளின் தரத்தினை மேம்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து குன்னூர் மற்றும் கொச்சி மையங்களில் தேயிலைத்தூள் நுகர்வோரைக் கவர 'நுகர்வோர் கூட்டம்–2014' நடத்தப்பட்டது. இக்கழகத்திலுள்ள எட்டு தேயிலை தொழிற்சாலைகளுக்கு இவ்வாண்டில் ஐ.எஸ்.ஓ 22000 தர சான்றிதழ் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- இக்கழகத்தின் சில்லறை வர்த்தகத்தை அதிகரிக்கும் பொருட்டு ஏலக்காய், மசாலா, இஞ்சி மற்றும் கருந்தேயிலைத்தூள் என

நான்கு வகை டிப் தேயிலைத்தூள் பைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அழகாக வடிவமைக்கப்பட்ட 100 'டிப் டீ' பைகள் கொண்ட பரிசுப்பேழை அறிமுகப்படுத்தப்பட்டு நுகர்வோர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. சில்லறை வர்த்தகத்தை மேலும் அதிகரிப்பதற்காக முதன்முறையாக இக்கழகத்தின் தேயிலைத்தூளுக்கு பண்டிகை விழாக்கால சிறப்பு சலுகையாக 10 சதவீதம் தள்ளுபடி மாநிலம் முழுவதும் பொங்கல் பண்டிகையின் போது வழங்கப்பட்டு, அச்சலுகை நேரடியாக நுகர்வோரை சென்றடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்துடன், இச்சலுகை ஒவ்வொரு காலாண்டிலும் ஒரு வாரத்திற்கு அளிக்கப்படும்.

- தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் குன்னூர் மற்றும் நடுவட்டம் தேயிலைக்

கோட்டங்களில் **'சூழல் சுற்றுலா'** தலங்கள் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சுற்றுலாப்பயணிகள் பயன்பெறும் வகையில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நடுவட்டத்தில் ஒரு 'தேயிலை அருங்காட்சியகம்' அமைக்கவும், குன்னூரில் சுற்றுலாப்பயணிகள் தேயிலையகம் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 12.3. அரசு ரப்பர் கழகம், நாகர்கோவில்

நாகர்கோவிலை தலைமையிடமாகக் கொண்ட அரசு ரப்பர் கழகம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு வனத்துறைக்கு சொந்தமான 4187.68 எக்டேர் வனநிலங்களிலுள்ள ரப்பர் தோட்டங்களை குத்தகைக்கு எடுத்துள்ளது. தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் ரப்பர் பயிரிட மண்வளம், தட்ப வெப்பநிலை மற்றும் இட அமைப்பு பொருத்தமாக உள்ளது. 1956ஆம் ஆண்டின் இந்திய கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 01.08.1984 அன்று, அரசு ரப்பர் கழகமாக பதிவு செய்யப்பட்டு,

01.10.1984 முதல் இயங்கி வருகிறது. இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.10 கோடியாகும். இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.8.45 கோடியாகும். இக்கழகத்தின் மொத்த பங்கு முதலீட்டையும் தமிழ்நாடு அரசு தன் வசம் வைத்துள்ளது. இக்கழகத்தில் 311 இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்கள் உள்ளிட்ட 1,504 நிரந்தரப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**12.3.1. உற்பத்தி மற்றும் நிதி சாதனை**

உற்பத்தி மற்றும் நிதி சாதனை விவரங்கள் இணைப்பு–7ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**13. முடிவுரை**

வனங்கள், நீண்டகாலம் வளர்ந்து முதிர்ச்சியடைந்த பின்னர் மனித இனத்திற்கு தொடர் சேவையினை வழங்குகிறது. தமிழ்நாட்டில் மாபெரும் மரம் நடவுத் திட்டம் மற்றும் தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் தனியார் நிலங்களில் மரங்கள் வளர்த்து வனமல்லாத பகுதிகளிலும்

வனம் மற்றும் மர அடர்த்திப்பரப்பை அதிகரிக்க மிகப்பெரிய அளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மலைவாழ் மக்கள் மற்றும் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த அவர்களின் மனமுவந்த பங்கேற்புடன் வனப்பாதுகாப்பினையும் வனவளர்ச்சியையும் மேம்படுத்த இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. வனவியலை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றி வனநிர்வாகத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மனித உயிரினம் தழைத்தோங்க வனம் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் வனத்துறை உறுதி பூண்டுள்ளது. மேலும், வனம் மற்றும் வன உயிரினப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பின் வாயிலாக மனித இனத்தின் நீடித்த வாழ்விற்கான வாழ்வாதாரங்கள் உறுதி செய்யப்படும்.

**எம்.எஸ்.எம். ஆனந்தன்**
**அமைச்சர் – வனம்**

## இணைப்பு–1

**வன வருவாய்**

| வ. எண். | வருவாய் – இனங்கள் | 2014–15 வரவு செலவு திட்ட மதிப்பீடு (ரூ. லட்சங்களில்) |
|---|---|---|
| அ. | சந்தன மரம் | 2,000.00 |
| ஆ. | தடிமரம் | 525.00 |
| இ. | தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்கள் வழங்குதல் | 87.41 |
| ஈ. | இதர சிறுவனப்பொருட்கள் | 20.00 |
| உ. | பண்ணைக்காடுகள் வளர்த்தல் (மீள அளிக்கப்படும் தொகையைத் தவிர்த்து) | 1,900.00 |
| ஊ. | மூங்கில், முந்திரி, மென்மர முதலிய தோட்டங்கள் விற்பனை | 11.00 |
| எ. | இதர வருவாய்கள் | 1,456.06 |
| | **மொத்தம்** | **5,999.47** |
| | பிடித்தங்களைக் கழிக்க (–) | 1,513.10 |
| | **ஆக மொத்தம்** | **4,486.37** |

## இணைப்பு–2

**செலவினம்**

| திட்டத்தின் பெயர் | 2014–15ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (ரூ. லட்சங்களில்) |
|---|---|
| திட்டத்தில் சேராதது | 35,508.97 |
| மாநில வனத்திட்டங்கள் | 26,479.03 |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100%) | 2,184.62 |
| மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டங்கள் (50:50) | 820.03 |
| **மொத்தம்** | **64,992.65** |

## இணைப்பு–3

## 2014–15ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டங்கள்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. லட்சங்களில்) |
|---|---|---|
| 1. | தேனி வன உயிரினக் காப்பாளருக்கு குடியிருப்பு மற்றும் சிவகங்கையில் ஓய்வு இல்லக்கட்டடம் கட்டுதல் | 78.21 |
| 2. | உயிர்ப்பன்மை குறித்த மதிப்பீடு, விவரப்பட்டியல் மற்றும் வேலூர் கோட்டத்திற்கான வனச்செயல் திட்டம் தயாரித்தல் | 5.00 |
| 3. | சென்னை நகரில் புள்ளிமான்கள் மீட்பு மற்றும் மறுவாழ்வளித்தல் | 44.73 |
| 4. | சுசீந்திரம் தேரூர் பறவைகள் பாதுகாப்பு “0 பகுதியில்" (Zero Point) உள்ள தகவல் மையத்தை மேம்படுத்துதல் | 6.00 |
| 5. | சூரிய ஒளி உணரிகளுடனான புள்ளிமான் குறியீட்டு பலகை | 10.00 |
| 6. | பாறைப்பகுதியில் காடு வளர்ப்பு | 10.80 |
| 7. | 12 வன மண்டலங்களில் வனவிலங்கு கணக்கெடுப்பு நடத்துதல் | 12.00 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. லட்சங்களில்) |
|---|---|---|
| 8. | கடையநல்லூர் சரகத்தில் மூங்கில் பண்ணை ஓடை மற்றும் பாண்டித்தேவர் ஓடை குறுக்கே யானை புகா வண்ணம் இரும்பு / கான்கீரிட் தடுப்புகள் அமைத்தல் | 12.00 |
| 9. | வன எல்லைகளைச் சுற்றிலும் கற்றாழை பயிரிடுதல் | 7.00 |
| 10. | வன எல்லைகளில் பனை விதைகள் நடுதல் | 6.00 |
| 11. | வனவிரிவாக்கக் கோட்டங்களில் சிறந்த செயல்முறைகளை மற்றும் வெற்றித் திட்டங்களை அடையாளங்காணுதல் | 1.10 |
| 12. | வடிகால் அமைப்பு மற்றும் கான்கீரிட் சிறுபாலங்கள் அமைத்தல் மூலம் பைகாரா படகு இல்லத்தை மேம்படுத்துதல் | 20.00 |
| 13. | பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளில் புளியமரக்கன்றுகளை வளர்த்தல் | 10.00 |
| 14. | திருவாரூர் மாவட்டம், வடுவூர் பறவைகள் சரணாலயத்தில் சுற்றுப்புற உயிரின சுற்றுலா மூலமாக உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு | 100.00 |
| | **மொத்தம்** | **322.84** |

# இணைப்பு–4

## தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம்

### சாதனைகள்

| வ. எண். | தோட்ட வகைகள் | செயல் (எக்டேரில்) | | நிதி (ரூ.கோடிகளில்) | |
|---|---|---|---|---|---|
| | | 2012–13 | 2013–14) | 2012–13 (கணக்கு) | 2013–14 |
| 1. | தைலமரம் | 4112 | 4054 | 10.76 | 11.76 |
| 2. | முந்திரி | 814 | 910 | 2.73 | 2.97 |

### கூழ்மரம்

| ஆண்டு | விநியோகம் செய்யப்பட்ட அளவு (மெ.டன்னில்) | வருவாய் (ரூ.கோடிகளில்) |
|---|---|---|
| 2012-13 | 2,13,551 | 60.86 |
| 2013-14 | 2,27,699.95 | 69.11 |
| 2014-15 (வரவு செலவு திட்ட மதிப்பீடு) | 2,25,000 | 72.00 |

### முந்திரி

| ஆண்டு | வருவாய் (ரூ.கோடிகளில்) |
|---|---|
| 2012-13 | 6.23 |
| 2013-14 | 2.88 |
| 2014-15 (வரவு செலவு திட்ட மதிப்பீடு) | 8.90 |

# இணைப்பு–5

## தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம்

## வருவாய் மற்றும் செலவினம்

(ரூ.கோடிகளில்)

| ஆண்டு | வருவாய் | செலவினம் | லாபம் (+) நட்டம் (–) |
|---|---|---|---|
| 2012–13 (கணக்குகள்) | 84.98 | 52.17 | (+) 32.81 |
| 2013–14 (திருத்திய மதிப்பீடு) | 82.32 | 54.74 | (+) 27.58 |
| 2014–15 (வரவு செலவு திட்ட மதிப்பீடு) | 95.64 | 62.25 | (+) 33.39 |

## 2014–15ஆம் ஆண்டுக்கான பிரேரணைகள்

| தோட்டங்கள் | செயல் (எக்டேரில்) | நிதி (ரூ.கோடிகளில்) |
|---|---|---|
| யூகலிப்டஸ் | 4110 | 11.34 |
| முந்திரி | 850 | 2.51 |

## இணைப்பு–6

## தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம்

## குத்தகைக்கு விடப்பட்ட பகுதி

| நிலை | ஆண்டு | சாகுபடி பரப்பு (எக்டேர்) | | |
|---|---|---|---|---|
| | | நீலகிரி | ஆனைமலை | மொத்தம் |
| முதல் நிலை | 1969 -1979 | 1850.74 | .. | 1850.74 |
| இரண்டாம் நிலை | 1979-1981 | 591.10 | .. | 591.10 |
| மூன்றாம் நிலை | 1982-1984 | 336.58 | .. | 336.58 |
| நான்காம் நிலை | 1990-1995 | 576.26 | 956.36 | 1532.62 |
| **மொத்தம்** | | **3354.68** | **956.36** | **4311.04** |

## பசுந்தேயிலை மற்றும் பதப்படுத்தப்பட்ட தேயிலை

(லட்சம் கிலோவில்)

| விவரங்கள் | 2012–13 (உள்ளபடி) | 2013–14 (12 மாதங்களுக்கு) |
|---|---|---|
| பசுந்தேயிலை அறுவடை | 329.27 | 379.22 |
| பதப்படுத்தப்பட்ட தேயிலை | 82.87 | 94.87 |

## வருவாய் மற்றும் செலவின விவரங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | தேயிலை மற்றும் இதர பொருட்கள் விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | செலவு | நிகர லாபம்(+) நட்டம் (–) |
|---|---|---|---|
| **2012–2013** (கணக்கு) | 7,416.17 | 7,013.60 | (+)402.57 |
| **2013–2014** (கணக்கு) (**9** மாத காலத்திற்கு) (டிசம்பர், **2013** வரை) | 6,493.43 | 6,392.61 | (+)100.82 |

# இணைப்பு–7

## அரசு ரப்பர் கழகம்

| விவரங்கள் | 2012–13 (உள்ளபடி) | 2013–14 (திருத்திய மதிப்பீடு) | 2014–15 வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| ரப்பர் உற்பத்தி (மெ. டன்னில்) | 1467 | 1800 | 1900 |
| (அ) வருவாய் (ரூ. கோடியில்) | 25.12 | 41.60 | 62.27 |
| (ஆ) செலவினம் (ரூ.கோடியில்) | 28.25 | 35.80 | 36.01 |
| லாபம் (+) (அ) நட்டம் (–) (ரூ. கோடியில்) | (-) 3.13 | (+)5.80 | (+) 26.26 |

## தமிழ்நாடு பசுமையை நோக்கி...



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காவல்துறை தலைமை இயக்குநரகத்தில் 66வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் மரம் நடவுத் திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

## பசுமைக்கனவு நனவானது



மாபெரும் மரம் நடவுத் திட்டத்திற்கு முன்: 2012–13ஆம் ஆண்டில் கள்ளக்குறிச்சியிலுள்ள மூங்கில்துறைப்பட்டி



மாபெரும் மரம் நடவுத் திட்டத்திற்குப் பின்: 2013–14ஆம் ஆண்டில் கள்ளக்குறிச்சியிலுள்ள மூங்கில்துறைப்பட்டி

## யானைக்குட்டியின் மீதான அன்பு



முதுமலை புலிகள் காப்பகத்திலுள்ள யானைகள் முகாமில் யானைக்குட்டியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிடுகிறார்.

## யானைக்குக் கிடைத்த இனிய விருந்து



முதுமலை புலிகள் காப்பகத்திலுள்ள யானைகள் முகாமில் யானைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உணவு அளிக்கிறார்.

## புலிக்குட்டிகளுக்கு பெயர் சூட்டுதல்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்அவர்கள் வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நான்கு வெள்ளைப்புலிக்குட்டிகளுக்கும், மூன்று புலிக்குட்டிகளுக்கும் பெயர் சூட்டினார்கள்.

## வண்டலூரில் யானைக்குட்டிகளைப் பார்வையிடுதல்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் தாயினால் கைவிடப்பட்ட நான்கு யானைக்குட்டிகளை பார்வையிட்டார்கள்.

## கட்டமைப்பை அதிகப்படுத்துதல்



## கட்டமைப்பை அதிகப்படுத்துதல்



## தரமான வனச்சாலைகள்




13வது நிதிக்குழுத் திட்டத்தின் கீழ் அத்திக்கடவு முதல் குடப்பட்டி வரை மலைவாழ் மக்களுக்கான வனச்சாலை அமைத்தல்

## வனவிலங்குகளுக்கான குடிநீர்த்தொட்டி



சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் கட்டப்பட்டுள்ள நீர்த்தொட்டி

## வனப்பாதுகாப்புப் பணிகள்



13வது நிதிக்குழுத் திட்டத்தின் கீழ் திருப்பத்தூர் கோட்டத்தில் வேட்டைத்தடுப்புக்காவலர் முகாம் மற்றும் கண்காணிப்புக் கோபுரம் அமைத்தல்

## தாகத்திற்கு தண்ணீர் பருகும் யானை



சத்தியமங்கலம் கோட்டத்தில் வன உயிரினங்களுக்கான நீர்வரத்துப் பெருக்கம்

## வனம் வளம்பெற நீர் சேகரிப்பு




நீர்வளப் பாதுகாப்பு மற்றும் மரஅடர்த்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சேலத்தில் கட்டப்பட்ட தடுப்பணை

## தடிமரத் தோட்டம்




தஞ்சாவூர் கோட்டத்தில் வேலன்குடி வாய்க்கால் படுகையில் எழுப்பப்பட்ட தேக்கு மரத் தோட்டம்

## புதிய கட்டமைப்புகள்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளிக் காட்சி மூலம் திறந்து வைத்த குற்றாலம் வனச்சரக அலுவலகத்தின் புதிய கட்டடம்

## புயல் பாதித்த பகுதிகளில் மறுநடவு



விழுப்புரம் கோட்டத்தில் 'தானே புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுநடவு' திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவுப்பணிகள்

## வனச் சோதனைச்சாவடி




13வது நிதிக்குழுத் திட்டத்தின் கீழ் திருப்பூர் கோட்டத்தில்
கட்டப்பட்டுள்ள வனச் சோதனைச்சாவடி

## வன உயிரினப்பாதுகாப்பு



தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ்
சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்திலுள்ள வேட்டைத் தடுப்பு முகாம்

## தனியார் நிலங்களில் மரம் நடவு



தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் வனவியல் விரிவாக்கப் பிரிவு, மதுரை
– தென்மண்டலத்தில் தனியார் நிலங்களில் மரங்கள் நடுதல்